# செந்தமிழ்

தொகுதி: 92 ஆகஸ்ட் 1998 பகுதி: 8

திங்கள் இதழ்

மதுரைத் தமிழ்ச் சங்கம்

THE MADURAI TAMIL SANGAM

முதன்மை ஆசிரியர் மா.தனுக்கோடிபாண்டியன் பி.ஏ., பி.எல.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

ஆசிரியர் பேரறிஞர் ந. பாலுசாமி

எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பி.எச்டி., எம்.எட்.,

# செந்தமிழ் ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பேரறிஞர் | தமிழண்ணல்<br>முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,<br>மதுரை காமராசர் பல்கலைக் கழகம் |
| பேரறிஞர் | செ. கந்தசாமி<br>முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை. |
| பேரறிஞர் | அ தட்சிணாமூர்த்தி<br>முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை. |
| பேரறிஞர் | பழநி. அரங்கசாமி, தஞ்சாவூர். |
| பேரறிஞர் | ம.ரா.போ. குருசாமி<br>செந்தில், தாமு நகர், கோயம்புத்தூர் |
| பேரறிஞர் | ச. மெய்யப்பன்<br>முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்,<br>அண்ணாமலைப் பல்கலைக்கழகம். |
| பேரறிஞர் | சி.கதிர் மகாதேவன்<br>மதுரை காமராசர் பல்கலைக் கழகம். |
| பேராசிரியர் | கு. துரைராசு<br>முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை. |
| பேரறிஞர் | அ.அ மணவாளன்<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். |
| பெரும்புலவர் | இரா. இளங்குமரன்<br>திருவள்ளுவர் தவச்சாலை, அல்லூர், திருச்சி. |
| பேராசிரியர் | ந பொன்னப்பன்<br>மதுரைக் கல்லூரி, மதுரை. |
| பேரறிஞர் | திருமதி பத்மா சீனிவாசன்<br>ஆங்கிலப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம் |
| பேரறிஞர் | ந மாணிக்கம்<br>தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை. |
| பேரறிஞர் | திருமதி சரசுவதி விசய வேணுகோபால்<br>மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை. |
| பேரறிஞர் | எஸ்.எம். கமால்<br>21, ஈசா பள்ளிவாசல் தெரு, இராமநாதபுரம். |
| பேரறிஞர் | ஈ.கே. இராமசாமி<br>தமிழ்ப் பேராசிரியர், யாதவர் கல்லூரி, மதுரை. |
| பேராசிரியர் | சே. அரிராமநாதன்<br>தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை. |

# செந்தமிழ்

திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 1000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

முதன்மை ஆசிரியர் ***மா.தனுக்கோடி பாண்டியன்*** பி.ஏ.,பி.எல்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை – 1.

ஆசிரியர் பேரறிஞர் ***நா. பாலுசாமி***

எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பி.எச்டி., எம்.எட்.,

# பொருளடக்கம்


1. **தாய் மொழியை வளர்த்தல்** *262*
*உ.வே.சா. வேங்கடராமய்யர்*

2. **எல்லோர்க்கும் தொல்காப்பியம்** *273*
*பேரறிஞர் நா. பாலுசாமி*
*(மதிப்புறு பேராசிரியர், உயர் ஆய்வு மையம், மதுரைத் தமிழ்ச் சங்கம்)*

3. **ஒப்பிலக்கியக் கொள்கையின் கூர்தலறக் கோட்பாடு** *276*
*பேரறிஞர் கதிர் மகாதேவன்*
*(மதிப்புறு பேராசிரியர் உயர் ஆய்வு மையம் மதுரைத் தமிழ்ச் சங்கம்).*

4. **அழகியல் நோக்கில் புறநானூற்றுப் பாடல்கள்** *282*
*பேரறிஞர் தெ.திருஞானமூர்த்தி, மேலைச்சிவபுரி*

5. **மக்கள் நல அரசு** *289*
*நாபா, மதுரை.*

# தாய்மொழியை வளர்த்தல்

- உ.வே.சா. வேங்கடராமய்யர்

*(முன் இதழ்த் தொடர்ச்சி)*

*நமது தமிழ்மொழியைத் தாய்மொழியாகப் பெற்றவர்கள் சற்றேக்குறைய இருகோடியினர் ஆவார்கள் என்பது முன்னர்க் கூறப்பட்டது. இன்னணம் இருந்தும், நமதுமொழி வளரவேண்டிய நிலைமையில் இருக்கின்றது. என்செய்வது? இனியேனும். அவர்கள் பொதுவாக ஒவ்வொருவரும், சிறப்பாக உயர்தரப் படிப்பைப் படித்துப் பட்டம்பெற்றவர்களும் - தாம் தாம் தமது மொழியாளரராகிய பிற உடன்பிறப்பாளருடன் பேசும்போதெல்லாம் தடுக்கமுடியாத நிலைமை உண்டானாலன்றி எக்காரணம் கொண்டும் தாய் மொழியாலன்றிப் பிறமொழிகளாற் பேசிக் கொள்ளுதல் கூடாது என்ற உறுதிப்பாடு உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்; இங்கு அன்னார், "ஆங்கிலப் பார்லிமென்டு சபையிலே இந்தியா உதவி மந்திரியாராயிருந்த கனம் ஸின்ஹாப்பிரபு அவர்களும், இந்தியா மந்திரி சபையிலே ஓர் உறுப்பினராயிருக்கும் கனம் பூபேந்திரநாதவஸு அவர்களும் லண்டன் மாநகரத்திலும் தாங்கள் தனித்துப் பேசிக் கொள்வதாயின் ஆங்கிலமொழியிற் பேசிக்கொள்ளாது தங்களது தாய்மொழியிலேதான் பேசிக் கொள்வார்கள்" என்று கேட்கப்படுவதை ஊன்றியறிதல் பொருத்தமானது. அன்றியும், அவர்கள், தமது தாய்மொழியை அறிந்தவர்களிடத்தில் அதை விடுத்துப் பிறமொழிகளாற் பேசுவதைப் பாவச்செயலாகவும் கருதல் வேண்டும்; மேலும், ஆண்டாண்டுள்ளமொழிப் பற்றுடையார் அனைவரும் முன்னர்த் தாங்கள் நடந்துகாட்டிப் பிறரையும் அங்ஙனமே நடந்துகொள்ளுமாறு திருத்திவரல் வேண்டும். "இச்சபையில் எனது தாய்மொழியாகிய தமிழிலே என்னால் பேச முடியாமைக்கும், தெரியாமைக்கும் நான் வருந்துகிறேன்" என்று அதனையும் வேற்று மொழியாற் கூறுவதைப் பெருமையாக நினைப்பது தவறு என்பதையும், அது வெட்ககரமானது*

என்பதையும் உணரல் வேண்டும்; பிரசங்கம் செய்பவர் தாம் செய்யும் பிரசங்கத்தைக் கேட்பவர்கள் எந்த மொழியை இயல்பில் அறிந்திருக்கின்றார்களோ அந்த மொழியிலேயே பிரசங்கம் செய்தால்தான் அந்தப்பிரசங்கம் குறித்த பயனை அளிக்கும்'' என்பதை அவர்க்கு வற்புறுத்திக் கூற வேண்டியதில்லை. இங்கு, அவர், "முன்னர்த் தமது தாய்மொழி (வங்காள மொழி)யிலே செய்யுளை இயற்றி அதைத்தான் பின்னர்த் தம்மால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க முடியும்" என்று நமது (இந்தியக்) கவியரசர் ரவீந்திரநாத்தாகோர் கூறுவதன் உட்கருத்தை உற்று நோக்கற்பாலர். இன்னும், அன்னார், ஒரு நாடு ஒற்றுமையுற்று முன்னேறும் வண்ணம் துணை புரிவதற்கு அந்த நாட்டு மொழியின் வளர்ச்சியே பெரிதும் இன்றியமையாதொன்று என்பதனையும், தமது கருத்திற் பதிய வைத்துக் கோடல் வேண்டும். இதற்கு மேற்கோளாக "ஒரு நாடு முன்னேற வேண்டுமாயின், உதிரம் உடல் முழுவதும் ஓடிப்பரவுதல் போல், அந்நாட்டுப் பெரியோர்களின் கருத்துக்கள், அந்த நாட்டு மக்கட்பரப்பு முழுவதும் ஓடிப் பரவுதல் வேண்டும். ஆனால், அவை, அவரவர்கள் தாய்மொழித் துணையாலேதான் அங்ஙனம் ஓடிப்பரவ முடியும்" என டாக்டர் பி.ஜே.மேதா அவர்கள் கூறுவது நம்மனோரால் ஊன்றி அறியத்தக்கதாம். இவற்றால், தமிழராவார் ஒவ்வொருவரும் 'தன் கையே தனக்கு உதவி' என்ற உறுதியருமை உணர்ந்து தத்தம் உரை செல்லும் இடங்களிளெல்லாம் நமது மொழியின் வளர்ச்சிக்கு இன்றியமையாத பல துறைகளிலும் முயன்று வரல் வேண்டும் என்பதும் அவர் செய்ய வேண்டும், இவர் செய்ய வேண்டும் என்று வாய்ப்பேச்சுப் பேசிக் கொண்டு வாளா நாள்கழித்தல் கூடாது என்பதும் பெறப்படுகின்றன. இங்கே, தாய்மொழியை வளர்க்க வேண்டியதன் இன்றியமையாமையை வற்புறுத்துங்கால் மத்திய ஐரோப்பாவிலும் கீழ் ஐரோப்பாவிலுமுள்ள யூதர்கள் தங்களுக்குள் ஒரேபாஷை உபயோகிக்கப்பட வேண்டும் என்ற கருத்துடன் தாங்கள் பேசும் ஆபாச இட்டிஷ் பாஷையை ஒரு நாகரிக பாஷையாய்ச் செய்து அதில் உலகத்திலிருக்கும் உத்தமமான கிரந்தங்களை எல்லாம் மொழி பெயர்த்திருக்கிறார்கள். அவர்களாற்கூட அன்னிய பாஷைகளின்

மூலமாய்த் தங்கள் மனோபாவங்களைத் திருப்தி செய்து கொள்ள முடியவில்லை. தவிர, அந்த ஜாதியில் அதன் மூலமாய் அறிவைப்பெற வேண்டுமென்று நினைக்கவில்லை; ஆகையால், அவர்கள், எல்லாராலும் ஆபாசபாஷை என்று கருதப்பட்ட தங்களது தாய்ப்பாஷையை நிரம்பவும் கஷ்டப்பட்டுச் சீர்ப்படுத்தி, சிரேஷ்டமான நூல்களையெல்லாம் அதில் மொழி பெயர்த்து அதைக் கௌரவப்படுத்தியிருக்கிறார்கள். இது மிகவும் ஆச்சரியமான காரியம். இந்த ஒருதலைமுறையிலேயே இந்தப் பாஷை வெப்ஸ்டர்ஸ் அகராதியில் "யூதர்களால் உபயோகப் படுத்தப்படும் ஓர் ஆபாஸ கலப்பிடப்பாஷை என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால், இப்பொழுது இந்தப் பாஷையானது இப்படித் தூஷிக்கப்பட்டால் ஐரோப்பாவில் இருக்கும் யூதர்களுக்குக் கோபம் உண்டாகும். இந்த யூதபண்டிதர்கள் ஒரு தலைமுறைக்குள் தங்களது ஆபாசபாஷையை உன்னத நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கும் பொழுது, நம்முடைய நர்கரிகமடைந்த தேசபாஷைகளைச் சிறப்பிப்பது மிகவும் சுலபமான காரியம். தென்னாப்பிரிக்காவிலும் இதே மாதிரி நடந்திருக்கிறது" என்று மகாத்மா காந்தி அடிகள் கூறியிருப்பது நம்மனோர்க்கு நமது மொழியை வளர்க்கத்தக்க போதிய ஊக்கத்தை அளிக்கும் என நம்புகின்றேன்.

## உ. நமது புலவர்கள்

இத்திருக்கூட்டத்தார் நமது தாய்மொழியைப் பற்றிச் சிறப்பித்து இஃது ஓர் உயர்தனிச் செம்மொழியாம். இதில் எல்லா வளங்களும் நிறைந்துள்ளன என்று கூறிக்கொண்டு காலத்திற்கேற்றவாறு வேண்டும் பலவற்றைச் சேர்த்துக்கோடற்கு முட்டுக்கட்டைகளாக இருந்து வருதல் கூடாது. சொற்களைப் புதியதாகப் படைத்துக் கொள்வதற்கு ஆசிரியர் தொல்காப்பியனார் ஆணை தந்துள்ளார் என்பதை இவர்கள் அறிந்தே இருப்பார்கள் என்பது ஒருதலை. ஆதலின், அன்னார், நமது தண்டமிழை, உலக வழக்கழிந்த, உயிரற்ற சில உயர்தனிச் செம்மொழிகளோடு ஒப்பிட்டுப் பெருமைப்படுத்த முயலலாகாது. ஆனால். அன்னார் நமது தாய்மொழியாம் தண்டமிழை உலக வழக்கிலுள்ள, உயிர்த்திருக்கும் உயர்தனிச் செம்மொழி என்று கூறிச் சிறப்பிக்க முயலல் வேண்டும்.

## ங. கழகங்கள்

இவை, ஆண்டிற்கொரு முறை கூட்டங்கூடிச் சில நூறு வெண்பொற் காசுகளைச் செலவு செய்து ஆடம்பரத்துடன் பலர் ஒன்று கூடிச் சிலர் சிலவற்றைப் பற்றிப் பேசிக் கலைவதாற் சிறிதும் பயன் விளைந்து விடாது. ஆனால், அவை, அங்ஙனம் செய்தமட்டில் தங்களது கடமையை நிறைவேற்றியதாகக் கருதிவிடாது அதனினும் மேலாக மொழியின் வளர்ச்சிக்கெனப் பல துண்டுப் பிரசுரங்களை ஏராளமாய் வெளியிட்டு எவர்க்கும் இலவசத்தில் எளிதிற்கிட்டுமாறு செய்துவரல்; என்றும் நின்று நிலவக்கூடிய தகுதியினையுடையதும், சமயப்பகுதி, கல்விப் பகுதி, சரிதப்பகுதி, செல்வப்பகுதி, உழவுப்பகுதி, கைத்தொழிற் பகுதி, வியாபாரப் பகுதி, அரசியற்பகுதி ஆகிய பல பகுதிகளையுடையதுமான சில மாதாந்தரச் செந்தமிழ்ப் பத்திரிகைகளைத் தக்க ஆராய்ச்சியாளர்களைக் கொண்டு எழுதுவித்து வெளியிட்டுவரல்; எளிய இனிய நடையிலுள்ள பல சிறந்த உரை நூல்களை வெளியிடல் ஆகியவற்றையும் மேற்போட்டுக் கொள்ளல் வேண்டும். அன்றியும், அவை, பொருள் வருவாய் ஒன்றனையே குறிக்கொண்டு இவையிற்றை மேற்போட்டுக் கொள்ளலாகாது. தமிழ் மக்களது அறிவுவளர்ச்சி ஒன்றனையே குறிக்கொண்டு மேற்போட்டுக் கொள்ளல் வேண்டும். இத்தகைய அரிய செயல்களை மதுரைத் தமிழ்ச்சங்கத் தாரும், சென்னைத் தமிழர்கல்விச் சங்கத்தாரும் மேற்போட்டுக் கொண்டு செய்ய முன்வரலாம். இம்முறையில் உழைக்கத்தக்க வேறு பல கழகங்களும் உள. அவை அங்ஙனம் செய்ய முன்வருதல் மாத்திரம் போதியதாகாது. தமிழர்களும் அவற்றைப் பெரிதும் போற்றிவளர்த்து வாங்கிப்படித்துப் பயன்பெற முந்துறல் வேண்டும். இங்ஙனம். பலர் படித்தறிந்து கொள்ள முன் வருவாராயின், அத்தகைய ஆராய்ச்சி நிறைந்த இன்றியமையாத பல பத்திரிகைகளும், நூல்களும் வெளி வருவதும் இயலாததொரு காரியமன்று. தமிழ்மொழி மாட்டுப் பேரன்பு உண்டு என விருது பேசிக் கொண்டு இருப்புக் கடலையைப் போலக் கடினமான நடையிற் சிலவற்றை எழுதி இயற்கைக்கு மாறாக நடக்காமலும் இருக்க வேண்டும். சுற்றுப் பக்கங்களிலுள்ள ஊர்களுக்கு உறுப்பினர்களை அனுப்பி மொழியின் உயர்வையும் , அதன் இன்றியமையாமையையும் விரித்துக் கூறுவித்தும், ஆங்காங்குக் கிளைக் கழகங்களை

நிலையிடுவித்தும் வளர்த்துவர முயலல் வேண்டும். நாம் பேசுவது இன்ன மொழியென்பதைக்கூட அறியாத பல தமிழ்மக்கள் இன்னும் நமது தமிழ்நாட்டில் பத்தாயிரக்கணக்கில் இருக்கின்றார்கள் என்பதைத் தாழ்மையுடன் கழகங்களை நடத்துவோர்க்கு நினைப்பூட்டுகின்றேன்.

## ச. ஸ்தலசுயாட்சிஸ்தாபனங்கள்

நமது தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனங்கள் நமதுநாட்டிற் பல இருக்கின்றன. அவை அனைத்தும் முதலில் தங்களுடைய கடிதப் போக்குவரத்துக்களையும், ஏனைய நடவடிக்கைகளையும் நமது தாய்மொழியிலேயே செய்துவரல் வேண்டும். அன்றியும், அவை தத்தம் அதிகார எல்லைக்குட்பட்ட ஊர்களிலுள்ள எல்லாச் சிறுவர் சிறுமியர்களுக்கும் தாய்மொழியைப் பயிற்றுவிக்கத்தக்க பள்ளிக்கூடங்களைப் போதிய அளவு வைத்து நடத்தி வருவதோடு பிறரால் நடத்தப்படும் அத்தகைய பள்ளிக் கூடங்களுக்கும் பொருள்முட்டுப்பாடு உண்டாகாமற் போதிய அளவு பொருளுதவி செய்தும் வரல் வேண்டும். நிற்க, அத்தகைய பள்ளிக் கூடங்களை நிலையிட்டும் ஆதரித்தும் வருவதால் மாத்திரம் அவை தமது கடமையை நிறைவேற்றியன ஆகா. போதிய அளவு பிரசார வேலை செய்து பொது ஜனங்களைப் படித்துப் பலன் பெறுமாறு தூண்டுவதும் அவற்றின் கடமையாகும். ஏனெனில், அவற்றின் வருவாய் அனைத்தும் தமிழ் மக்களிடமிருந்தே பெறப்படுகின்றன. அன்றியும், அவற்றை நடத்துவோர் அடையும் பெருமை அனைத்தும் அவர்களைத் தங்களுடைய பிரதி நிதிகளாகத் தெரிந்தெடுத்த தமிழ் மக்களாலேயே தரப்படுகின்றன ஆதலின் என்க.

## ரு. துரைத்தனம்

நமது மொழியை வளர்த்தற்குற்ற உரிமையையும் கடமையையும், போதிய ஆற்றலையும் பெற்றிருப்பன சென்னை, இலங்கை ஆகிய இரண்டு துரைத்தனங்களும்; பெரும்பாலும் துரைத்தனத்தாலேயே நடத்தப் பெற்றுவரும் சென்னைச் சர்வ கலாசாலையுமேயாம். இவை, தமது கடமையை உணர்ந்து நமது மொழியை வளர்க்க முன் வருமாயின்,

அவற்றிற்கும் அத்துறையில் அதிகத்தொல்லைகள் உண்டாகமாட்டா; நமது வேண்டுகோளும் இனிது நிறைவேற்றப் படலாம். அவை, முதலில் தம்முடைய "அதிகார எல்லைக்குட்பட்ட நடவடிக்கைகளையும் நமது தாய்மொழியாம் தண்டமிழ் மொழியிலேயே செய்து வரல்வேண்டும். இங்குத் தாங்கள் செய்ய வேண்டிய அனைத்தும், – வேண்டு கோள்களோ, கட்டளைகளோ, அறிவிப்புக்களோ, – தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட மக்களிடத்திலே தான் என்பதையும், தங்களால் காக்கப்பட வேண்டியவர்களும், கற்பிக்கப்பட வேண்டியவர்களும் தமிழர்களே என்பதையும், தங்களுக்கு வரும் பொருள்கள் அனைத்தும் தமிழர்கள் அரிதிலே தேடிக் கொடுப்பனவே என்பதையும், தாங்கள் செய்யும் அதிகாரமும், அடையும் பெருமையும் தங்களைப் பிரதி நிதிகளாகத் தேர்ந்தெடுத்த தமிழர்களாலேயே தங்களுக்குக் கிடைத்தன என்பதையும் அவற்றை நடத்து வோர்க்கு நினைப்பூட்ட வேண்டியதில்லை. இங்ஙனம் நடைபெறுதற்குத் தாய்மொழியைப் பயிலாது படித்துப் பட்டம்பெற்றுப் பட்டதாரிகள் எனப் பலரும் வெளிவரக்கூடியதாக இருக்கும் தற்காலக் கல்விமுறை முதலில் அடியோடு மாற்றப்படல் வேண்டும். உலகத்தில் நமதுநாடு (இந்தியா) ஒன்றுதான் தாய்மொழியைப் பயிலாமல் பட்டதாரிகள் வெளிவரக்கூடிய நிலைமையில் உள்ள நாடாகும். இது பெரிதும் வருந்தத்தக்கதே. இத்தகைய இழிந்த நிலைமை எவ்வளவு விரைவில் நீக்கப்படுகின்றதோ, அவ்வளவு விரைவில் நமதுமொழியும், நாடும் முன்னேறும் என்பது தவறாகாது. இக்கருத்தே பல சான்றோர்களுக்கும் உடன்பாடாம். இம்மட்டோ தற்கால முறைமை? தாய்மொழிக்கு முதல் இடம் கொடுக்காததோடு தாய்மொழியைக் கற்றவர்களும் இழிந்தவர்களாகக் கருதப்படுகின்றார்கள். அந்தோ! வெட்கம்!! வெட்கம்!!! ஆதலின், உடனே, தற்காலக் கல்வி முறையை மாற்றித் "தாய்மொழியைப் பயிலாது பட்டதாரிகளாக இனி எவரும் வெளிவர முடியாது" என்ற கண்டிப்பான கட்டளையைச் செய்து கைக்கொள்ளல் வேண்டும். அன்றியும், எங்கெங்கே தாய்மொழியை வளர்த்தற்குப்

பாடுபடப் பொது ஜனங்கள் முன்னுக்கு வருகின்றார்களோ அங்கங்கெல்லாம் தங்களுடைய உத்தியோகஸ்தர்களை அனுப்பி அவர்களுக்கு ஊக்கமளித்துவர முயலுவதுடன் அவர்களது முயற்சிக்குப் போதிய அளவு பொருளுதவி செய்தும் வரல் வேண்டும். அதிகம் சொல்வானேன். முன்னே கூறியுள்ள வண்ணம் எல்லா முயற்சிகளும் வெளிப்படையாக முன்வந்து அவற்றிற்குத் தக்கவாறு போதிய அளவு எல்லாத் துறைகளிலும் உதவிசெய்து வளர்த்து வரல் வேண்டும். மேலும் அவை 'எத்தகைய அரிய உயரிய பிறமொழிக் கருத்துக்களையும் தங்களுடைய குடிகளாகிய பொது ஜனங்கள் தடையின்றித் தங்கள்தங்கள் தாய்மொழியால் விழுந்து விளக்கி உரைத்துக் கொள்ளும் தகுதியினையும், அறிவினையும், ஆற்றலினையும் பெற்றிருக்கின்றார்கள்' என்று பெருமை பேசிக் கொள்ளத்தக்க நிலைமை உண்டாவதே மிக மேலான ஆட்சியின் அறிகுறி என்பதையும் அறிந்து கொள்ளல் வேண்டும். இதுபற்றி எழுதிக் கொண்டே போகலாம். எனினும், அங்ஙனம் எழுத முன்வரவில்லை. ஆனால், 'ஒரு நாட்டின் அறிவு வளர்ச்சிக்கும், சமய வளர்ச்சிக்கும், ஆட்சி முதலிய பிறவற்றின் வளர்ச்சிக்கும் துணை செய்வதற்கு, அந்நாட்டினர் ஒவ்வொருவரும் "முதலில் தத்தம் தாய்மொழியையும் இரண்டாவதாகத் தத்தம் சமயச் சார்பான உயர்வையும் அறிவையும் வளர்க்கத்தக்க கருத்துக்கள் நிறைந்த மொழியையும், பின்னர் ஆட்சியாளரின் மொழியையும் கற்றல் வேண்டும்" என்று பல பெரியோர்களும் கூறுவது நம்மனோரால் உய்த்துணரத்தக்கது', என எடுத்துக் கூறாமலிருக்க முடியவில்லை. இக்கருத்துப்பட முன்னம் ஒரு கால் மாட்சிமிக்க பரோடா அரசர் கூறியதும் நினைவிற்கு வருகின்றது. இம்மூன்றும் ஒரே மொழியில் அமைந்துள்ள நாடுகளும் இருக்கின்றன. அத்தகைய நாடுதான் விரைவில் முன்னேறக் கூடியது, நமது நாடும் ஒருகால் அத்தகைய மேலான நிலைமையில் இருந்ததே, நமது தாய்மொழியும் அம்மூன்றையும் ஒருசேரக் கொண்டுள்ளதே. என் செய்வது! தற்பொழுது சிறிதும் ஆற்றலற்றிருக்கின்றோம்! எனினும், இத்தகைய நிலைமை எந்நாட்டிலும், எப்பொழுதும் நிலைத்திருக்க முடியாதாதலின் நமது மொழியும் விரைவில் வளர்ச்சி பெறும் என்பது ஒருதலை.

## சு. பொது

இந்நிலையில், ஒரு சாரார் பிறமொழிகளிலுள்ள எல்லாக் கருத்துக்களையும் எளிதில் அறிவிக்கத்தக்க ஆற்றலுள்ள சொற்கள் தமிழ் மொழியில் இல்லை என்றும், பிறிதொருசாரார் பிறமொழிகளிலுள்ள எத்தகைய கருத்துக்களுக்கும் தமிழ்மொழியிற் சொற்களைப் படைத்துக்கொள்ளலாம் என்றும், வேறாரு சாரார் பிறமொழிகளிலுள்ள கருத்துக்கள் கலக்கப்பட வேண்டுமாயின் அக்கருத்துக்களை அறிவிக்கும் அந்த அந்தப் பிறமொழிச் சொற்களை அப்படி அப்படியே நமது எழுத்துக்களால் எழுதிச்சேர்த்துக் கொள்ளலாம் என்றும், மற்றும் பலர் வேறு பலமாதிரியாகவும் மொழி பெயர்த்தலைப் பற்றிய கருத்துக்களை ஆங்காங்கு வெளியிட்டுள்ளனர்; வெளியிட்டும் வருகின்றனர். இது பற்றி ஒருவகை முடிவு விரைவில் ஏற்பட்டே தீரும். அஃது எங்ஙனமாயினும் ஆகுக. எங்ஙனம் ஓடுகின்றயாற்றுநீர் தன்னொடு கலக்கும் பிறவேற்று நீர்களைத் தடையின்றிச் சேர்த்துக்கொண்டு அவற்றைத் தன்னிறமேயாக்கிச் சிறிதும் தன்னியல்பினின்றும் வழுவாது பின்னரும் ஒழுகுகின்றதோ அங்ஙனமேதான் நமது தாய்மொழியாம் தண்டமிழும். எங்ஙனமெனில், நமது தமிழ்மொழி ஓடுகின்றயாற்றுநீர் போலப் பேச்சு வழக்கில் உள்ள மொழிகளுள் ஒன்றாயுள்ளது. இது முன்னரும் கூறப்பட்டது. ஆதலின், இதனுள் வேற்று நீர்களைப் போன்ற பிறமொழிக் கருத்துக்கள் வந்துசேருவது இயல்பே. சேரவேண்டும் என்பதுதான் நமது விருப்பமும். அதுதான் மொழியின் வளர்ச்சியைப் பெருக்க வல்லதும். இங்ஙனமே தான் பிற பேச்சு வழக்கிலுள்ள மொழிகளும் வளர்ந்து வருகின்றன. இதற்கு உதாரணமாக ஆங்கிலம், ஜப்பான், வங்கம், ஆந்திரம் முதலிய நாட்டுமொழிகளைக் கூறலாம்.

இனி, நமது மொழி இத்தகைய மாறுதலுக்குற்ற தகுதியினைப் போதிய அளவு பெற்றிருக்கின்றது என்பதை விளக்கலும் பொருத்தமானதே. இதற்குத் தற்காலம் பல அறிஞர்களாலும் வெளியிடப் பெற்றுள்ள பலதிறப்பட்ட நூல்களையும் குறிப்பிடல் வேண்டும். அதனால் நமது தாய்மொழியாந்தண்டமிழ் காலத்திற்கேற்ற கருத்துக்களைத் தன்னகத்துக் கொள்ளும் தகுதியினைப் பெற்றிருக்கின்றது என்பதும் உறுதியுறும். எனினும், இங்கு, அவையிற்றைக்

குறிப்பேனாயின்; அஃது ஒரு பெரிய அட்டவணையாக நீண்டு காலத்தை வீணாக்கும். ஆதலின், அதனைக் குறியாது விடுகிறேன்.

ஒருமொழியிலுள்ள அரியபெரிய கருத்துக்களைப் பிறிதொரு மொழியில் மொழிபெயர்த்தல் எளியதொரு வேலையன்று; அஃதொரு பொறுப்புடைய வேலையேயாம். அன்றியும், மொழிபெயர்ப்பதானால் அந்த அந்த மொழிகளுக்குள்ள இயற்கையான சிறப்புக்கள் கெடாதிருத்தலும் வேண்டும். 'ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியை விரட்டிற்றாம்' என்ற பழமொழிக்கிலக்காகப் புதுக்கருத்துக்கள் நுழைந்து மொழி பெயர்ப்பு மொழியின் பழைய பெருமைகளை மறைத்து விடாத நிலைமையிலும் அமைதல் வேண்டும். மேலும், இங்ஙனம் மொழி பெயர்த்தல் முதலிய செயதற்கோ தாம் மொழிபெயர்க்கமுயலும் மொழிகளில் வல்லுநராகப் பலர் முன்வரல்வேண்டும். அன்னார் மிக்க பொறுமையாளராகவும், நடுநிலையாளராகவும், 'தந்நலத்திலும் நாட்டின் நலமே பெரிதாம்' என்ற கொள்கையினை உடையவராகவும், பொருள் முட்டுப்பாடு இல்லாதவராகவும் இருத்தல் வேண்டும். அன்றியும், அன்னார்க்கு உதவி புரியப் பலமொழிகளிலும் வல்ல பல அறிவாளிகள் அடங்கிய ஒரு கழகமும், பொருளுதவி செய்யத்தக்க வசதிகளும் இருத்தல் வேண்டும்.

இங்ஙனம், தத்தம் மொழியிடத்துள்ள குறைபாட்டை உணர்ந்த மொழிப்பற்றுடையார் அனைவரும் 'என் செய்வது' என்று எண்ணி மடிந்து வாளா இராது, அக்குறைபாட்டை "முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்" என்றபடி, தமது முயற்சிக் குறைவினால் வந்தது எனக் கருதிப் பலர் ஒன்று சேர்ந்தும், தனித்தனியாகவும் இயன்ற அளவு ஒவ்வொரு துறையிலும் "முயற்சி திருவினையாக்கும்" என்றதைக் கடைப்பிடித்து ஊக்கத்துடனும், நம்பிக்கையுடனும் உறுதியாய் உழைக்க முன்வருதல் வேண்டும். அங்ஙனம் முயன்றால் இக்குறைகள் மிக விரைவில் நீங்கிவிடலாம். இங்கே, 'தமிழின் அபிவிருத்தி' என்ற தலைப்பின் கீழ் 'தமிழ் வரலாறு' என்ற ஆராய்ச்சி உரையில் அறிஞர் ஸ்ரீமான், ராவ்பகதூர் கே.சி. ஸ்ரீநிவாஸபிள்ளை அவர்கள் எழுதியுள்ள பகுதியும், "சேணிற்பறக்கின்ற செந்தமிழ்க் குதிரைமுன் - திட்டேது தட்டேது காண்" என்ற பழைய தொடர்மொழியும் ஊன்றியறியத்தக்கனவாம்.

## ஏன் வளர்த்தல் வேண்டும்

உலகத்தில் மக்களாய்ப் பிறந்தார் எவரும் தமது நாட்டைத் தாழ்ந்த நிலைமையிற் பார்க்க உடன்படார். ஆனால், உயர்ந்த நிலைமையிற் பார்க்கவே விரும்புவர்; அதற்கான முயற்சியையும் இயன்ற அளவு செய்வர். ஒரு நாடு தாழ்ந்த நிலைமையிலிருந்து உயர்ந்த நிலைமையை அடையவேண்டுமானால், அந்த நாட்டினரிடம் உண்மை, உறுதி, ஊக்கம், ஒற்றுமை, சமத்துவம், தந்நயங்கருதாமை, சுயமதிப்பு, நடுநிலை, அஞ்சாமை, ஆண்மை முதலிய நற்குணங்கள் இருத்தல்வேண்டும். அத்தகைய நற்குணங்களோ எல்லோரிடத்திலும் எளிதில் வந்தடையக் கூடியன அல்ல. அவை ஆய்ந்த கல்வி, நிறைந்த கேள்வி, தக்கார்களது சேர்க்கை முதலியவற்றால் ஒருவருக்குண்டாகலாம். இவற்றுள்ளும் முதன்மையானது கல்வியே.

அறம் பொருள் இன்பம் வீடு என்ற நாற்பெரும் பேறுகளையும் அளிக்கவல்ல, இன்றியமையாத கல்வியோ இளமையிலேயே கற்று வளர்த்துக்கொள்ளவேண்டியதாகின்றது. இளமைப் பருவத்திற் கற்பதற்கோ தாய்மொழியே அன்றி, பிறமொழிகள் உயர்வுடையன ஆகா. அன்றியும், அவை, தாய்மொழியால் அடையும் பயனைப்போன்ற அத்துணை சிறந்த பயனை எவர்க்கும் எளிதாகவும் விரைவாகவும் கொடா. எனவே, எத்தகைய கருத்துக்களையும் எவரும் எளிதாகவும், குறைந்த கால அளவிலும் அறிந்து கொள்ளுவதற்கு அவரவர்களது தாய்மொழியே மேலான துணை செய்வதாகும் என்பது பெறப்படுகின்றது. பல அறிஞர்களது கருத்தும், உலக அனுபவமும் இஃதேயாம். "அறிவுடையார் எல்லாம் உடையர்" என்ற தேவர்வாக்கும் ஈண்டுச் சிந்தித் துணரற்பாலது.

## வளர்க்காவிடில் வரும் இழுக்கு என்னை?

'இது வரையிற் கூறியுள்ள குறைகள் நமது மொழிக்கு இழுக்கைத் தருவன அல்லவா? என்று கேட்பதே இதற்குப் போதிய விடையை அளிக்கும் என்பது ஒருதலை. என்றாலும், "தாய் மொழியைப் போற்றி வளர்க்காதிருப்பது ஜாதீயத்தற் கொலையாகும்" என்று மகாத்மா காந்தி அடிகள் கூறியதையும் இதற்குற்ற நல்லதொரு விடையாகக் கூறலாம்.

## வளர்த்தலால் வரும் பயன் யாது?

இத்துணையும் கூறியது கொண்டே இவ்வினாவுக்குப் பொருந்திய விடையை அறிந்துகொள்ளக்கூடும். எனினும், எடுத்துக் கொண்டதற்கேற்பச் சில சொல்லி நிறுத்துவேன். நமது மொழியைப் போலவே தற்காலத்திற்குவேண்டும் பலவற்றையும் தன்னகத்துக் கொள்ளாக்குறையைப் பெற்றிருந்த வங்கமொழி தன்னுடைய அன்பர்களால் தன்னிடமிருந்த அக்குறைகளின்றும் நீங்கி இப்பொழுது நூல்வளத்தாலும் கருத்துநிறைவாலும், பிறவற்றாலும் குறைவுபடாத இந்தியமொழிகளில் ஒன்றாக விளங்குகின்றது. அம்மொழிக்குரிய வங்காளிகளாகிய நமது (இந்திய, சகோதரர்களோ முன்னேற முயலும் ஒரு நாட்டினரிடம் இருக்க வேண்டிய நற்குணங்கள் பலவற்றையும் பெற்றிருப்பதோடு கல்வி, செல்வம் என்ற இரு பெரும் பேறுகளையும் பெற்று நம்மவருள் (இந்தியருள்) முதன்மையினராகத் தலைசிறந்து விளங்கி வருகின்றார்கள். அவர்களை அத்தகைய பெருமைக்கும், முதன்மைக்கும் உரியவர்களாக்கியது அவர்களது விடாமுயற்சியின் பயனால் வளர்ந்த அவர்களது தாய்மொழி (வங்க மொழி)யின் திருந்திய பெருக்கமே அன்றிப் பிறிதன்று. இதனினும் மேம்பட்டபயன் உண்டோ? இஃதன்றோ மொழிப்பற்று! இங்ஙனம் முயன்றாலன்றோ எவரும் முன்னேறலாம். இங்ஙனமே, நமது பக்கத்திலிருந்து மிக விரைந்து முன்னேறிவரும் நமது ஆந்திர சகோதரர்களது நன்முயற்சியும், அதனால் அவர்கள் அடைந்து வரும் பெருமையும், ஜப்பான் மிகத் தாழ்ந்த நிலைமையிலிருந்து மிக விரைவில் இவ்வளவு மேலான நிலைமைக்குவந்த வரலாறும், பிறவும் நம்மனோரால் உய்த்துணரத் தக்கனவாம்.

## முடிவுரை

அறிஞர்களே! எனது புல்லறிவிற்கெட்டிய அளவு ஏதோ சில கூறினேன். இனி, நல்லறிவுள்ள தாங்கள் "ஞாலங்கருதினும் கைகூடும் காலங்கருதி இடத்தாற்செயின்" என்ற நல்லுரையை நாடி, ஒன்றுகூடி, நன்கு ஆராய்ந்து, தக்கதுசெய்து நமது தாய்மொழியாந் தண்டமிழைக் காலத்திற்கேற்றவாறு பல துறைகளிலும் வளர்த்துப் பெரும்புகழ் பெறுவீர்களாக. **(மார்ச் 1924)**

# எல்லோர்க்கும் தொல்காப்பியம்

- பேரறிஞர் நா.பாலுசாமி

(முன் இதழ்த் தொடர்ச்சி)

(தொல்-சொல்-வினை)

## சூத்திரம் 222

(விரவுத்திணை வினைகள்)

***முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி***
***இன்மை செப்பல் வேறென் கிளவி***
***செய்ம்மன செய்யும் செய்த என்னும்***
***அம்முறை நின்ற ஆயெண் கிளவியும்***
***திரிபுவேறு படூஉம் செய்திய ஆகி***
***இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமைய***

(ப.உரை) முன்னிலை - முன்னிலை வினைச் சொல், வியங்கோள் - வியங்கோள் வினை, வினைஎஞ்சு கிளவி - வினை எச்சச் சொல், இன்மை செப்பல் - இன்மையை உணர்த்தும் இல்லை, இல் என்னும் சொற்கள், வேறு என் கிளவி - வேறு என்னும் வினைமுற்றுச் சொல்; செய்ம்மன செய்யும் செய்த என்னும் - செய்ம்மன, செய்யும், செய்த என வரும் வாய்பாட்டு எச்சச் சொற்களும் அ முறை நின்ற - அம்முறையில் வந்த, அ எண் கிளவியும் - அத்தகைய எட்டுவகை வினைச் சொற்களும். திரிபு வேறு படும் - பொதுமையிலிருந்து பிரிந்து வேறுபட்ட செய்கையை உடையனவாய், இரு திணை சொற்கும் - உயர்திணை அஃறிணை ஆகிய இருவகைத் திணைகளுக்கும், ஓர் அன்ன - ஒத்த, உரிமை மைய - உரிமைய உடையனவாம்.

முன்னிலை வினை முதல் செய்த என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம் முடிய உள்ள எட்டுவினைச் சொற்களும் ஒருகால் உயர்திணை உணர்த்தியும், ஒருகால் அஃறிணை உணர்த்தியும் நிற்கும் விரவுத்திணை வினைகளாம்.

**(வி.உரை).** **வினை எஞ்சு கிளவி - வினையெச்சம். இன்மை செப்பல் - இல்லை, இல என்பன. செய்ம்மன -**

வாய்ப்பாட்டுச் சொல், இது செய்யுளில் வரும். வாய்பாடு - பொது உத்தி. திரிவு - திரிந்து வருதல். படூஉம் - அளபெடை, படும் என்பதே சொல். முன்னிலை - ஏவல்பொருள் தருவது. வியங்கோள் - வேண்டுதல், வாழ்த்துதல் ஆகிய பொருள் தருவது. செய்ம்மன - எதிர்காலம் உணர்த்தும். செய்+மன செய்ம்மன. செய்யும் - இது முற்றுவினையாகவும், பெயரெச்சமாகவும் வந்து நிகழ்காலம் உணர்த்தும். செய்த - (செய்+த்+அ). - இறந்தகாலம் உணர்த்தும் பெயரெச்சம்.

இங்குக் கூறப்பட்ட முற்றும் எச்சமும் ஆகிய எட்டும் உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாக வரும் விரவு வினைகளாம்.

## சூத்திரம் 223

(முன்னிலை ஒருமை வினை)

*அவற்றுள்*
*முன்னிலைக் கிளவி*
*இ ஐ ஆய் என வரூஉம் மூன்றும்*
*ஒப்பத் தோன்றும் ஒருவர்க்கும் ஒன்றற்கும்*

(ப.ரை) அவற்றுள் - முன் சூத்திரத்தில் கூறப்பட்ட எட்டனுள், முன்னிலை கிளவி - முன்னிலை வினைச்சொற்களாகிய, இ ஐ ஆய் என வரும் மூன்றும் - இ, ஐ, ஆய் என்ற ஈறுகளைப் பெற்றுவரும் மூன்று வினைகளும், ஒருவர்க்கும் - உயர்திணையில் ஒருவருக்கும் ஒருத்திக்கும், அஃறிணையில் ஒன்றனுக்கும், ஒப்ப தோன்றும் - உரியனவாக விளங்கும்.

இ என்னும் இறுதியையும், ஐ என்னும் இறுதியையும், ஆய் என்னும் ஈற்றினையும் பெற்று முடியும் வினைமுற்றுகள் ஒருமையை உணர்த்தி ஒருவன், ஒருத்தி என்று உயர்திணை ஆண், பெண் பால்களுக்கும். அஃறிணை ஒன்றன்பாலுக்கும் ஒத்த உரிமை உடையனவாய் வரும்.

(வி.ரை) ஈறு - இறுதி - வினைமுற்றுகளின் கடைசியில் நிற்கும் எழுத்துக்கள். இ, ஐ, ஆய் - இம்மூன்றும் முன்நிற்பனவற்றை உணர்த்தும் முன்னிலைகள். ஒருவர்க்கும் - உயர்திணை ஆணுக்கும் பெண்ணுக்கும்

ஒன்றற்கும் - அஃறிணை ஒன்றன்பால். இவ்வாறு இருதிணைகளிலும் ஒருமையை உணர்த்தவரும் முன்னிலை வினைகள் பற்றியது இச்சூத்திரம்.

(எ.டு) உரைத்தி (உரைப்பாய்), உண்டி - (உண்பாய்) - இகர ஈறுவந்தமை காண்க.

உண்டனை, உண்பை - 'ஐ' ஈறு வந்தது. உண்டாய், உண்பாய் - 'ஆய்' ஈறு.

## சூத்திரம் 224

(முன்னிலைப் பன்மை வினை)

*இர்ஈர் மின்என வருஉம் மூன்றும்*
*பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினும்*
*சொல்லோ ரனைய என்மனார் புலவர்*

(ப.ரை) இர் ஈர் மின் என வரும் மூன்றும் - இர், ஈர், மின் என்று முடியும் மூன்று வினைகளும், பல்லோர் மருங்கிலும் - உயர்திணைப் பலர்பாலுக்கும், பலவற்று மருங்கிலும் - அஃறிணைப் பலவின் பாலுக்கும், சொல் ஓர் அனைய - சொல்லுமிடத்து ஒத்த உரிமை, என்மனார் புலவர் - என்று கூறுவர் அறிஞர்.

இலக்கண நூலோர் இர், ஈர், மின் என்பனவற்றை ஈற்றில் பெற்று வரும் முன்னிலை வினைமுற்றுகள் உயர்திணையில் பலர்பாலையும், அஃறிணையில் பலவின்பாலையும் உணர்த்தும்.

(வி.ரை) வரும் - வருஉம் என அளபெடுத்தது. மருங்கு - பகுதி, இடம். சொல் - கூறுமிடத்து. என்ப - இச்சொல் மன்+ஆர் பெற்று என்மனார் என முடிந்து நிகழ்காலம் உணர்த்தியது. இச்சூத்திரம் இருதிணைக்கும் பொதுவான முன்னிலை வினைகளை விளக்குவதாகும்.

(எ.டு) உண்டனிர் - (இர்)
உண்டனீர் - (ஈர்)
உண்மின் - (மின்)
} முன்னிலை உணர்த்தி நின்றன.

உண்டனிர், உண்டனீர்
உண்ணா நின்றனிர்,
உண்ணா நின்றனீர்,
உண்பிர், உண்பீர்.
உண்மின், தின்மின்
} இர்,ஈர் - இரண்டும், மூன்று காலத்திற்கும் வரும். 'மின்' எதிர்காலம் பற்றி வரும்.

(தொடரும்)

# ஒப்பிலக்கியக் கொள்கையின் கூர்தலறக் கோட்பாடு

- பேரறிஞர் கதிர் மகாதேவன்

ஒப்புநோக்கிய காரணத்தால் மனிதனின் சிந்தனைகள், எண்ணங்கள், கற்பனைகள், உணர்ச்சிகள், வடிவங்கள், அறிவுத்திறன் முதலியவை வளர்ந்துள்ளன.

வாய்மொழி, இலக்கியமாக மாறும்போது ஒப்புநோக்கும் திறன் மேலும் சீர்மையடைகிறது. எழுத்திலக்கிய வளர்ச்சியிலும் ஒப்புநோக்கின் நீர்மையினைக் காணலாம்.

காலம், இடம், இனவாழ்வு, சுற்றுச்சூழல் ஆகியவற்றைக் கடந்து ஒப்புநோக்கும் கற்பனை பரந்துபட்டதாய் உள்ளது என்பது சிறிது கற்பனை செய்யின் தெள்ளிதின் விளங்கும்.

இயற்கையாக மனிதன் தன் சூழலைச் சார்ந்தும் ஒப்பிட்டு நோக்கியும் வளர்கிறான். ஒப்பீட்டை மறுத்தும் புறக்கணித்தும் வாழும் தகைமையோர் வளமார் வாழ்க்கை உடையவரேனும், வளர்ச்சி பெற்ற மொழியாளர்கள் கூடச் சில நேரங்களில் ஒப்பீட்டை மறுப்பதனால் ஆக்கத்திற்குக் கேடு நிகழ்ந்த நிலைகளை வரலாற்றில் காண்கிறோம்.

விரைவாக முன்னேறிய கிரேக்கர்கள் ஒரு காலத்தில் தம்மிலும் ஒப்பாரும் மிக்காரும் இல்லை என இறுமாந்து ஒப்பிட்டு நோக்கும் தத்துவத்தை மறுத்தனர். எனவே, அவர்தம் நாகரிகம் அதளபாதாளத்தில் உருண்டு வீழ்ந்தது; அவ்வினமே அழிந்தது என வரலாறு புலப்படுத்துகிறது.

ஆரியர்கள் தங்களுக்கு என ஒரு மொழியைப் படைத்துக் கடவுளர்களோடு அந்த மொழியைத் தொடர்புபடுத்தி அதற்குத் "தேவபாடை" எனப் பெயர் சுட்டிப் பிற மொழியினருக்குத் தலைமை பூண்டு ஏனைய மொழிகளைப் "பைசாசம்" என ஒதுக்கித் தள்ளினர். எனவே சமஸ்கிருதம் அழிவை நோக்கச் சென்று பேசப்படாத மொழியாய்ச் சிறுபான்மையினருக்கு உரியதாய் நைந்துபட்டது.

முதன்முதலில் ஒப்பிலக்கியக் கூர்தலறக் கோட்பாட்டை கி.பி.1886இல் ஆராய்ந்து "போஸ்னெட்" (Posnett), உலகில் உள்ள அனைத்து இலக்கியப் படைப்புகளும் சமுதாய மாறுதல்களினால் ஏற்பட்ட விளைவாகவே கருதினர்; மேலும், போஸ்னெட் அனைத்து இலக்கியங்களும் ஒப்புநோக்கி ஆக்கப்பட்டன என்றார்.

இலக்கிய ஒப்புநோக்கின் படிநிலைகளை நான்கு வகைகளாகப் பிரித்தார். அவையாவன:

1. தனிமனிதன் தன் குழுவினருடன் கொண்ட உறவை மனத்தில் ஒப்பு நோக்கிப் பாடியவை.
2. குழுவினர் நிலையைக் கடந்து தன் இனத்தாரை ஒப்பு நோக்கிக் கொண்ட தொடர்பைப் புலப்படுத்திப் பாடிய பாடல்கள்.
3. இனமொழி எல்லையைக் கடந்து பிறநாடு என்றும் பிறமொழி என்றும் நோக்கி ஈடுபாடு கொண்டு பாடிய பாடல்கள்.
4. உலகத்தை ஒப்புநோக்கிப் பாடிய பாடல்கள்

மேற்கூறிய நால்வகைப் படிநிலை வளர்ச்சிகளையும் சங்க இலக்கியங்களில் காண்கிறோம்.

சங்க இலக்கியம் ஓர் இரண்டாயிரம் ஆண்டுக் காலப் பரப்பியலைக் களமாகக் கொண்டு காணப்படுகிறது. எனவே, இந்நால்வகைப் படிநிலைகளையும் அங்குக் காணமுடிகிறது.

## முதல்நிலை:

தனிமனிதன் தன் குழுவினருடன் கொண்ட உறவை மனத்தில் ஒப்புநோக்கிப் பாடியவை.

(எ-டு)

தமிழ் மண்ணிற்குரிய ஆற்றுப்படை இலக்கியங்கள் இப்படிநிலை வளர்ச்சிக்குச் சான்றுகளாகக் கருதலாம். எனவே, தமிழ் இலக்கிய வகைமை வளர்ச்சியில் இவைகள் முதலிடம் பெறுகின்றன. மேலும், இத்தகைய பாடல்கள் நாநவில் கவிதைகளுக்கும் வினைநவில் கவிதைகளுக்கும் வித்திட்டன எனலாம்.

## இரண்டாம் நிலை:

குழுவினர் நிலையைக் கடந்து தன் இனத்தாரை ஒப்பு நோக்கிக் கொண்ட தொடர்பைப் புலப்படுத்திப் பாடிய பாடல்கள்.

(எ-டு)

பழந்தமிழில் இதற்கு அகப்பாடல்களைச் சான்று கூறலாம். புலனெறி வழக்கம், இனத்தாரின் மரபுக் கொள்கைகளை வலியுறுத்துவதாகும். பழந்தமிழ்க் காதற் பாடல்கள் தம் இனத்தாரின் நலவாழ்வை ஒப்புநோக்கிப் பாடியவை; பரிபாடலில் குன்றம்பூதனாரின் பாடல் இதற்கு நற்சான்றாகும்.

அப்பாடல் வருமாறு:

*"நான்மறை விரித்து நல்லிசை விளக்கும்*
*வாய்மொழிப் புலவீர் கேண்மின் சிறந்தது*
*காதற் காமம் காமத்திற் சிறந்த*
*விருப்போர் ஒத்து மெய்யுறு புணர்ச்சி*
*புலத்தலின் சிறந்தது கற்பே...*
*தள்ளாப் பொருள் இயல்பின் தண்டமிழ் ஆய்வந்திலார்*
*கொள்ளார் இக்குன்று பயன்"* -

இப்பாடலின்கண் தமிழர் இனத்தில் தோன்றிய பண்பாட்டு மரபுகளை வடமொழி வாணர்களுக்குந் தெரிவிப்பதைக் காணலாம். பழந்தமிழ் இலக்கியத்தில் புறப்பாடல்களைவிடக் காதற் பாடல்கள் மும்மடங்காகக் காணப்படுகின்றன. இந்தக் காதற் பாடல்களைத்தாம் அகப்பாடல்கள் என்று கூறுகிறார்கள். இந்த அகப்பாடல்கள் அனைத்தும் தன் இனத்தாரை ஒப்பு நோக்கிக் கொண்டு பாடிய பாடல்கள் ஆகும். பிற நாட்டில் பாடிய காதற் பாடல்கள், தமிழ் நாட்டில் பாடிய காதற் பாடல்கள் ஆகியவை இடையே வேறுபாடு உண்டு. எடுத்துக்காட்டாக ஆங்கில நாட்டுக் கவிஞர்கள் பாடிய காதற் பாடல்கள் அனைத்தும் அக்கவிஞர்களின் வாழ்க்கையில் எதிர்ப்பட்ட சொந்த காதல் அனுபவத்தின் வெளிப்பாடாகும். ஷேக்ஸ்பியர் தன் காதலிக்கு எழுதிய பாடல்களையே நாம் இன்று படிக்கின்றோம். அது

போலவே ஷெல்லி, கீட்ஸ் முதலிய புலவர்கள் தத்தம் காதலிகளுக்கு எழுதிய பாடல்களை வியந்து பாராட்டிப் படிக்கிறோம். இத்தகைய பாடல்கள் தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூவிடங்களில், தன்மை நிலையில் வைத்துப் பாடுவதைக் காண்கிறோம். ஷெல்லியுடைய பாடல்களில், 'நான் நின்னுடன் கலந்தால் என்ன' என்று பாடல் முடிவதைக் காண்கிறோம். அப்பாடலின் பொருள் வருமாறு:

'ஊற்றுநீர் ஆற்றுநீரோடு கலக்கும்;; ஆற்றுநீர் கடல் நீரோடு கலக்கும் விண்ணில் வீசும் காற்று, ஒன்றுடன் ஒன்று கலந்து ஓர் இன்னிசை உறவை உருவாக்கும்; உலகில் எந்த இயற்கைப் பொருளும் தனித்து இருப்பதில்லை; அப்படி இருக்கும் போது, நானும் நீயும் மட்டும் தனித்தனியாக இருப்பது ஏன்? என்னில் நீ கலந்தால் என்ன? என்று பொருள் வரும்படி ஷெல்லி பாடுகிறார். இது ஷெல்லியின் சொந்த வாழ்க்கையில் தன் காதலிக்காகப் பாடிய பாடல் ஆகும். சமஸ்கிருதத்தில் காணப்படும் காதற் பாடல்களும் இத்தகையனவே ஆம். காஷ்மீரி பில்ஹணர் தன் காதலிக்குக் கவிதை ஒன்றைப் பாடினார். அக்கவிதையைக் கேட்ட அப்பெண்கள் தந்தை காஷ்மீரி பில்ஹணரின் தலையை வெட்டி விடுமாறு கட்டளையிட்டார். ஏனெனில் பில்ஹணர் காதலித்தது அரசிளங்குமரியை ஆகும். அப்பெண்ணின் தந்தை ஒரு பேரரசன் ஆவார். இவர் பாடிய கவிதையைப் படர்க்கையில் பாடவில்லை! "என் அன்புள்ள காதலி" என்று தன்மையில் பாடியுள்ளார்; உண்மையும் அதுதான்; தன் காதலிக்குத் தான் எழுதிய பில்ஹணரின் பாடல்கள் தன்னுணர்ச்சிப் பாடல்கள் ஆகும். இக்கவிஞரைக் கொன்றுவிடுமாறு, அரசன் கட்டளை இட்டதில் வியப்பில்லை எனலாம். காவலர்கள் அக்கவிஞனை மறுநாள் கொல்லுவதற்காக, முதல் நாள் சிறையில் அடைத்தனர். மறுநாள் பொழுதுவிடிவதற்குள் பில்கணர் ஐம்பது பாடல்களைப் பாடினார். இப்பாடல்களில் முதல்வரி, 'நான் நின்னை இன்னும் காதலிக்கிறேன்' என்று தொடங்கும் இந்த ஐம்பது பாடல்களையும் காவலர்கள் மூலம் தன் காதலியாகிய அரசிளங்குமரிக்கு அனுப்பி வைத்தான். வழக்கம் போல இப்பாடல்கள் அவர்தம் காதலிக்குச் சென்று சேரவில்லை! மாறாக அரசனின் கையில் இக்கவிதைகள் சிக்கின. அந்தப்

பேரரசன் இப்பாடல்களைப் படித்துப் பார்த்துக் கோபமடையவில்லை! இக்கவிஞன் கொண்ட காதலின் ஆழத்தையும், அகலத்தையும் உணர்ந்து கொண்டான். சிரச்சேதம் செய்வதற்காக அக்கவிஞன் கொலைக் களத்திற்கு அழைத்துச் செல்லப்படவில்லை! மறுநாள் காலை மணமாலை அவன் கழுத்தை அணி செய்தது; சமஸ்கிருதத்தில் பல காதற் பாடல்கள் கவிஞர்களின் சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட காதல் நிகழ்ச்சிகளின் விளைவால் பாடப்பட்டவை ஆகும். ஆனால் தமிழில் காணப்படும் காதற் பாடல்கள் கவிஞர்களின் சொந்த வாழ்வில் ஏற்பட்ட காதல் நிகழ்ச்சிகளின் எதிரொலிகள் அல்ல; அவை தமிழ் இனத்தாரின், இன மரபுகளைப் புலப்படுத்துவதற்காகப் பாடப்பட்டவை. காதல் என்ற உணர்ச்சி பொதுவான உணர்ச்சி என்றாலும், தன் காதலிக்குத் தான் பாடிய பாடலுக்கும் தன் இனத்தாரைப் பற்றிப் பாடும் காதற் பாடலுக்கும் பெரும் வேறுபாடு இருக்கும். சங்க இலக்கியக் காதல் பாடல்களைத் தம் இனத்தாரை ஒப்பு நோக்கிப் பாடிய பாடல்களாகும். எனவேதாம் தமிழ்க் காதற் பாடல்களை அகப்பாடல்கள் என்று குறிப்பிட்டனர். அந்தக் காரணத்தினால் தான் அகப்பாடல்களை, இறையனார் களவியல் உரை, "இல்லது இனியது என்று புலவரால் நாட்டப்பட்டதோர் ஒழுக்கம்" என்று கூறும், பழந்தமிழில் காணப்படும் இந்த நிலை ஒப்பு நோக்கில் காணும் இரண்டாம் நிலை எனலாம். இவ்விரண்டாம் நிலையைத்தான் குழுவினர் நிலையைக் கடந்து தம் இனத்தாரை ஒப்பு நோக்கிக் கொண்ட தொடர்பைப் புலப்படுத்திப் பாடிய பாடல்கள் என்று ஒப்பிலக்கியத்திறனாளி பொஸ்னெட் கூறுவர்.

## மூன்றாம் நிலை

இனமொழி எல்லையைக் கடந்து பிற நாடு என்றும் பிற மொழி என்றும் ஒப்பு நோக்கி, ஈடுபாடு கொண்டு பாடிய பாடல்கள் ஆகும்.

இப்படிப்பட்ட பாடல்களும் தமிழ் இலக்கிய வளர்ச்சி நோக்கிலும் போக்கிலும் காணப்படுகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாகச் சிலப்பதிகாரம் என்னும் தமிழ்க் காப்பியத்தைச் சான்றாகச் சுட்டலாம், சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர்களையும் இணைத்துக் காட்டும்

சிலப்பதிகாரம் இந்த மூன்று நாடுகளையும் தொடர்புபடுத்திக் காட்டுவதையும் உணர்கின்றோம். மருத நிலத்தில் தோன்றிய கண்ணகி, காவிரிபுகும் புகாரில் கருவாகி அந்த நெய்தல் நிலச் சூழலில் உருவாகி, முல்லை நிலத்திலும், பாலை நிலத்திலும், கண்ணகியின் கால்கள் உறவாடி, மிக உயர்ந்த நிலமாகிய மலை நாட்டில் கண்ணகி கடவுளான செய்தி நாடு, இன, மொழி எல்லைகளைக் கடந்த நிலையைக் குறிப்பின் சுட்டுகிறது. இந்தக் காப்பியக் கதை இந்திய நாட்டின் எல்லையாகிய இமயமலை வரை செல்கிறது. இமயமலையில் கண்ணகிக்குப் படிமம் அமைப்பதற்குக் கல்லெடுத்த சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் அமைப்பதற்கு வஞ்சிமா நகருக்கு அக்கல்லினைக் கொண்டு வந்தான். இக்காப்பியக் கதை நாடு, இன, மொழி எல்லையக் கடந்து இலங்கைக்கும் செல்கிறது. இலங்கையில் கண்ணகிக்குக் கோயில் எடுக்கப்படுவது சிலப்பதிகாரத்தில் குறிக்கப்படுகிறது.

## நான்காம் நிலை

ஒப்பு நோக்கில் இறுதி நிலையாக உலகத்தை ஒப்பு நோக்கி பாடிய பாடல்களைக் கூறுகின்றனர். இந்த நான்காம் நிலை தமிழ் இலக்கிய வரலாற்று தொடர்ச்சியிலும், வளர்ச்சியிலும் காண முடிகின்றது. திருவள்ளுவர் தன் ஊரையும், இனத்தையும் ஒப்பு நோக்கி உலகத்திற்குப் பாடிய பாடல்கள் திருக்குறள் ஆகும். திருக்குறளில் தமிழரென்றோ, தமிழ் நாடு என்றோ, குறிப்பிடவில்லை, 'உலகு' என்ற சொல்லே திருக்குறளின் முதல் குறளிலிருந்து பல குறள்களில் குறிக்கப்படுகின்றன. எனவே, திருக்குறளை ஊரை ஒப்பு நோக்கி உலகிற்குப் பாடிய பாடல்கள் என்று குறிப்பிடலாம்.

ஒப்பிலக்கிய நோக்கில் கூர்தலறக் கோட்பாட்டின் வளர் நிலைகள் அனைத்தும் தமிழ் இலக்கியங்களில் காணக் கிடைக்கின்றன. இந்தப் பரிணாம வளரச்சியைத் தெளிவாகக் காட்டும் தமிழ் மொழி உலக மொழிகளோடு ஒப்பிட்டும் உறழ்ந்தும் பார்க்கத் தக்கது என்பதை வெள்ளிடை மலைபோல் உணரலாம்.

# அழகியல் நோக்கில் புறநானூற்றுப் பாடல்கள்

- பேரறிஞர் தெ. திருஞானமூர்த்தி

மனித வாழ்க்கையைச் சித்திரிக்கும் இலக்கியம் அவ்வக்கால வாழ்க்கை மதிப்பீடுகளையும் அழகியலையும் வெளிப்படுத்துகிறது. அழகியல் என்ற வெளிப்பாட்டு நெறிக்குள் செறிவு பெறாத இலக்கியம் நிலைபேற்றுத் தன்மையை இழந்து விடுகிறது. புறநானூற்றுப் பாடல்களின் கருத்துக்கள் பேசப்பட்ட அளவிற்கு அதன் அழகியல் வெளிப்பாடு பேசப்பெறவில்லை. சங்கப் பாடல்களுள் புறநானூற்றுப் பாடல்கள் சிறப்புக்குரியன.

புறநானூற்றுப் பாடல்களில் கருத்தைச் சொல்லும் வகையில் ஓர் அழகியல் நெறி பின்பற்றப்பட்டிருக்கிறது.

*"செல்லு முலகத்துச் செல்வம் வேண்டினும்*
*ஞாலங் காவலர் தோள்வலி முருக்கி*
*ஒருநீ யாகல் வேண்டினுஞ் சிறந்த*
*நல்லிசை நிறுத்தல் வேண்டினு மற்றதன்*
*தகுதி கேளினி மிகுதி யாள" (18)*

என்ற பாடலில் சிறப்புக்குரிய மூன்றைச் சுட்டி அவற்றைப் பெறுதற்கு உலகுபுரக்கும் நீர் நிலைகளைப் பெருக்குக என்கிறார் புலவர். இந்நெறி புறம் 214-ஆம் பாடலிலும் பின்பற்றப் பட்டிருக்கின்றது. நல்வினையைச் செய்யத் தூண்டும் புலவர் காலம் தாழ்த்தாது உறுதிபடச் செய்தால் பின்வரும் மூன்றில் எண்ணியது கிடைக்கும் என்கிறார்.

*"தொய்யா வுலகத்து நுகரச்சியுங் கூடும்*
*தொய்யா வுலகத்து நுகர்ச்சி யில்லெனில்*
*மாறிப் பிறப்பி னின்மையுங் கடும்*
*மாறிப் பிறவா ராயினு மிமயத்துக்*
*கோடுயர்ந் தன்ன தம்மிசை நட்டுத்*
*தீதில் யாக்கையொடு மாய்தல் தவத்தலையே" (214)*

உண்டி கொடுத்து உலகு புரப்பதற்குக் காரணமாக இருந்தால் சிறப்புடை இம்மூன்றும் கிடைக்கும் எனக் குடபுலவியனாரும் நல்வினை செய்தால் சிறப்புடை மூன்றில் வேண்டியது கிட்டும் எனக் கோப்பெருஞ்சோழனும் வலியுறுத்துகின்றனர். சிறப்புடை மூன்றனுள் இருபாடலிலும் மூன்றாவதாகச் சுட்டப்பெறும் சிறப்புக்குரியதாக புகழே திகழ்கிறது.

முன்னதில் கூறப்பட்ட மூன்றிற்கும் பின்னதில் கூறப்பட்ட மூன்றிற்கும் ஒரு வேறுபாடு மறுபிறப்புப் பற்றியதாகும். மறுபிறப்புப் பற்றிய சிந்தனை புறநானூற்றில் மிகமிக அருகியே காணப்பெறுகின்றது.

புறப்பாடல்களில் ம்றுமை பற்றிய கருத்துக்கள் உண்டென்றாலும் புலவர்கள் இம்மைக்கே சிறப்புத் தந்து பாடியுள்ளனர்.

*"இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்*
*அறவிலை வணிக னாயலன்...." (134)*

என மறுமை எதிர்ப்பே ஆய் மன்னனின் சிறப்பாக அமைகிறது. பரணரும் பேகன் மறுமையை நோக்கிக் கொடுப்பவன் அல்லன், பிறர் வறுமையை நோக்கிக் கொடுப்பவன் என்கிறார் (141) செய்வினை முடித்துச் சிறப்புடன் வாழ்தல்தான் வாழ்க்கை; அதன் பின்னர் எந்தச் சடங்கைச் செய்தால் என்ன எதை வேண்டுமானாலும் செய்க (239) என்கிறார் பேரெயின் முறுவலார்.

நல்லிசை நிறுத்தலே வாழ்வின் குறிக்கோள் என்பதைப் பெரும்பாலான புறப்பாடல்கள் வலியுறுத்துகின்றன. எனவே, புறநானூற்றுப் பாடல்கள் மனித குலத்தின் உயர்ந்த குறிக்கோளை எடுத்தியம்பியதனால் அவை காலம் கடந்தும் செல்வாக்குச் செலுத்தும் ஆற்றல் உடையனவாகத் திகழ்கின்றன.

தொடர்புடையனவற்றை இணைத்தும், முரண் பாடானவற்றைப் படைத்தும் புலவர் தாம் கருதிய பொருளைத் தெளிவு படுத்துகின்றார். குடபுலவியனாரின் பாடல்

தொடர்புடையனவற்றின் இணைப்பிற் பிறந்த அழகோவியமாய்த் திகழ்கிறது. நீர் நிலைகளைப் பெருக்குக என்பதே பாடலின் அடிப்பொருளாதலின், அதனைச் சொல்லும் முறையில் புலவர் இரு நெறிகளைப் பின்பற்றியுள்ளார். அவை 1) புறப்பாடல்களின் வாழ்த்தில் தொடங்கும் பொதுவான முறை 2) அவருக்கே உரித்தான தருக்க முறையில் மேற்குறிப்பிட்ட அடிப்பொருளைத் தொடர்புடையனவற்றின் இணைவுகளாகச் சித்திரித்தல்.

உண்டி - உயிர்
உண்டி - உடம்பு
உணவு - நிலமும் நீரும்
நீரும் நிலமும் - உடம்பு உயிரும்
புன்புலம் - இகழ்ச்சி
நன்புலம் - புகழ்ச்சி

என இணைவுகள் தருக்க நெறியில் அமைந்து பாடலின் பொருளை ஆன்மிக நிலைக்கு உயர்த்தியுள்ளன.

கோப்பெருஞ்சோழன் மன்னன் ஆதலின், உலகமாந்தரின் மன இயல்புக்கு ஏற்ப நல்வினை செய்யும் உணர்வைத் தூண்டுகின்றான். நல்வினை செய்தால் அவரவர் விருப்பத்திற்கும் முயற்சிக்கும் ஏற்ப எண்ணியது கிட்டும் என்பதை முரண் நிலையில் தெளிவுபடுத்துகின்றான்.

ஐயமற்ற மனத்தெளிவுடையோர் X தெளிவற்றோர்
யானை வேட்டுவன் X குறும்பூழ் வேட்டுவன்

என எதிர்வுகள் அமைந்து கவிதையைப் படிக்கும் வாசகன் குறும்பூழ் வேட்டுவனாயின், அவனை யானை வேட்டுவனாக உறுதி கொள்ளச் செய்தலை இவ்வெதிர்வுகள் காட்டுகின்றன.

கோப்பெருஞ்சோழன் சுட்டும் மூன்று நிலைகள் உலகமாந்தர்களின் வேறு வேறான மூன்று வாழ்க்கைக் கோட்பாட்டாளர்களையும் உள்ளடக்கியனவாக உள்ளன. எனவே ஒரு மன்னன் என்ற நிலையில் அனைத்துத் தரப்பினருக்குமான வாழ்க்கைக் குறிக்கோளை அவன் பாடல் தந்து நிற்கிறது.

உயர்ந்த கோட்பாடுகள் மூன்றன் அடிப்படையில் பாடலைக் கட்டமைத்த புலவர்கள் வாழ்வின் உறுதிப் பொருளாக அறம் பொருள் இன்பத்தை வலியுறுத்துகின்றனர். இன்பமும், பொருளும் அறத்தின் பாற்பட்டனவாகத் திகழ்தல் வேண்டும் என அறத்திற்கு முதன்மை தரும் நிலையும் பாடுபொருளின் சிறப்பை மிகுதிப்படுத்தியிருக்கிறது. அறனும், பொருளும், இன்பமும் மூன்றும் ஆற்றும் பெரும (20) என்றும் அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர் (62) என்றும் அறத்தை முதன்மைப்படுத்துகின்றனர்.

பாடற் கருத்தை வாசகன் மனத்தில் ஆழப்பதிக்கவும் விளக்கவுமான நிலையிலும் மூன்று என்னும் நெறியே பெரும்பான்மையும் பின்பற்றப்பட்டிருக்கின்றது.

பாண்டியன் நன்மாறன் பகை மன்னன் மீது சினம் கொள்வானேயானால் அவனைத் தடுப்பார் இல்லை என்பதை விளக்க வந்த ஐயூர் முடவனார், "நீர் மிகின் சிறையும் இல்லை, தீ மிகின் நிழலும் இல்லை; வளி மிகின் வலியும் இல்லை" (51) என உணர்த்துகின்றார். "விளை வயலைக் கொள்ளையிடுக: பேரூர்களை எரியூட்டுக; பகைவர்களை அழித்துக் கொல்க; ஆனால் காவல் மரங்களை மட்டும் வெட்டாதே" என நன்மாறனிடம் காரிக்கண்ணனார் வேண்டுகோள் விடுக்கின்றார்.

ஞாயிற்றை யொத்த ஆண்மையும் திங்களையொத்த அருளும் மழையைப் போன்ற கொடையும் உடையவன் (55) என நன்மாறனைச் சிறப்பிக்கின்றார் மருதன் இளநாகனார். வயல், குளம், களர்நிலம் மூன்றிலும் ஒரு தன்மையதாகப் பெய்த மழை போல இரவலர் எத்தகுதியராயினும் வரையாது வழங்கினாய் எனப் பேகனைப் புகழ்கிறார் பரணர். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனைக் காணும் முன், "யாழ் கையிலே; பசி வயிற்றிலே; நைந்த பழைய ஆடை இடுப்பிலே; என உலகெலாம் சுற்றி வந்தோம்" (69) என்கிறார் ஆலந்தூர் கிழார். இன்று சென்றாலும், சில நாள் கழித்துச் சென்றாலும் பின்னும் சென்றாலும் முன்னே தந்தேன் எனக் கூறாது தருபவனாத் திகழ்கிறான் (171) பிட்டன் கொற்றன். கிள்ளிவளவனிடத்துச் செற்றன்று ஆயினும்; செயிர்த்தன்று ஆயினும்; உற்றன்று ஆயினும் உய்யாது கூற்றம் என்கிறார் நப்பசலையார்.

*"அகன்ஞாலம் பெரிது வெம்பினும்*
*மிகவானு ளெரிதோன்றினும்*
*குளம்மீனொடுந் தாட்புகையினும்" (395)*

சோறும் இறைச்சியும் அளவற்றுத் தருபவன் பெருஞ்சாத்தன் என்கிறார் நக்கீரர். இந்நெறியே மேலும் பல புறப்பாடல்களிலும் பின்பற்றப்பட்டிருக்கின்றது.

ஒரே சொல் பாடலில் திரும்பத் திரும்ப பயன் படுத்தப்படும் போது சந்த இனிமையோடு கருத்துக்கும் ஓர் அழுத்தமும் கிடைக்கிறது. விளித்தல் நிலையில் இவ்வாறு அமையும் பாடல்கள் நான் X நீ அமைப்பில் பெரும்பாலும் அமைந்துள்ளன. 'நீயின்' கருத்துக்கு 'நானின்' மறுப்பாக இவை திகழ்கின்றன. ஒரே சொல் ஒரே பாடலில் மூன்று இடங்களில் வரும் புறப்பாடல்கள். (195, 206, 228, 233, 246, 273, 301) சில உள.

பல்சான்றீரே என்ற சொல் மூன்று பாடல்களில் மூன்றிடங்களில் இடம் பெறுகின்றது. சான்றோரை விளித்து உலக அறம் பேசுவதாகவும் (195) தனக்கேற்பட்ட துயரத்தைத் தாங்கிக் கொள்ள முடியாத நிலையில் சான்றோரை பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான்றீரே என இடித்துக் கூறவதாகவும் (246) மகளிர் கூந்தலில் பூச்சூடிக் கொள்வது போல முள்வேலியிட்டுப் போருக்கு வராது அரணில் இருக்கும் நும் அரசனைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் (301) என்பதாகவும் இச்சொல் இடம் பெறுகிறது.

பல்சான்றீரே! பல்சான்றீரே என ஒரே அடியில் விளி அடுக்காக அமைவன கூறவரும் கருத்தின் அவசரத்தையும் அவசியத்தையும் வலியுறுத்தி நிற்கின்றன. மூன்றாவது அல்லது நான்காவது அடியில் இடம்பெறும் சொல் மூப்படைந்தோரே, அறநெறிப்படுத்துபவர்களே, போருக்கு வராத அரசனைக் காப்பவர்களே எனச் சூழலைத் தெளிவுபடுத்துகிறது.

'வாயிலோயே' என்ற சொல் வாயிற் கதவடைக்கும் வாயிற் காவலனிடத்துப் புலவரின் சிறப்பைக் கூறி வாயிற் கதவடைக்காத வாயிலோனே (201) என விளிப்பதாக இடம் பெறுகிறது.

பொய்யாகியரோ, மாவாராதோ, கலஞ்செய்கோவே ஆகிய சொற்கள் கையறு நிலையில் திரும்பத் திரும்ப இடம் பெறுகின்றன. எவ்வி போரிலே புண்பட்டான் என்ற சொல் பொய்யாகாதோ; பொய்யாகாதோ (231) என்பதால் எவ்வியின் ஆளுமையையும் அவனை இழந்தோரின் மன உணர்வுகளையும் அவலப் பேரொலியாய் அவை எதிரொலிக்கின்றன. போருக்குச் சென்ற கணவனின் குதிரை வாராதிருக்கின்றதே; வாராதிருக்கின்றதே (273) எனப் புலம்பும் தலைவியின் சொற்கள் அவள்தன் மனத்துன்பத்தை வெளிக்காட்டுவனவாக அமைந்துள்ளன.

சோழக் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் இறந்தபோது அவனுடலைத் தாழியில் வைத்து அடக்கம் செய்வதற்காகத் தாழிவனைகையில் அவன் புகழை எவ்வாறு தாழிக்குள் அடக்குவாய் கலஞ்செய்கோனே (228) என வினவுகிறார் ஐயூர் முடவனார். கணவனுக்குச் செய்யும் தாழியைக் கொஞ்சம் பெரிதாகச் செய் எனக்கும் அதில் இடம் வேண்டும் கலஞ்செய்கோனே (256) என்கிறாள் கணவனை இழந்த தலைவி.

விளி அடுக்காகவும், சூழலை விளக்கி அழுத்தமாகவும் இடம் பெறும் இச்சொல் ஆளுமை முறைமை, கவிதைப் பொருளை மீண்டும் மீண்டும் மனத்தில் எதிரொலிக்கச் செய்யும் கவிஞரின் கவிதை நெறியாகும்.

சிறந்த உவமைகள் புறநானூற்றுப் பாடல்களில் காலம் கடந்தும் மிகுதிப்படுத்தியுள்ளன. தெளிவுக்காகவும், சிறப்புக்காகவும் பயன்படுத்தப் பெறும் உவமைகளைப் புலவர் விழிப்போடு கையாளவேண்டும். இல்லையேல், உவமை என்பது வெற்று அலங்காரமாயச் சிறுத்துப் போகும். புறம்பாடியோர் உவமையைத் தாய்மை போல் மதித்து ஆழ்ந்த பொருளோடு கையாண்டுள்ளனர்.

வாழ்க்கை முறையோடு தொடர்புடைய உவமைகள் கவிதையில் பொருண்மையைச் சிறக்கச் செய்துள்ளன. போர்வீரர் எல்லோரும் மறக்குடிப் பண்புகள் நிறைந்தவரேயாயினும் தமக்குத் தரும் மதுவை அவருள்ளும் இவனே சிறந்தவன் ஆதலின் இவற்கு ஈக என்பானின் செயலை,

*"ஈரச் செவ்வி யுதவின வாயினும்*
*பல்லெருத் துள்ளுந் நல்லெருது நோக்கி*
*வீறுவீ றாயு முழவன் போல"த் (289)*
*தேர்ந்து தந்தான்'* என்கிறார்.

வினையாற்றலை விரும்பும் தலைவனின் மன உணர்வைப் புலவர் வாழ்க்கை பற்றிய தம் கூரிய பார்வையால் அதனைச் சிறப்புற வெளிப்படுத்தி உள்ளார்.

இளஞ்சேட் சென்னியின் கொடைமையை விளக்க வந்த புலவர் (378) அவன் பரிசிலாக அளித்த அணிகலன்களை அணியும் வகையறியாது என் உறவினர் அணிந்தனர்; இது எவ்வாறு இருந்தது எனின் இராவணன் சீதையைச் சிறையெடுத்துச் சென்ற போது சீதையின் அணிகலன்களைக் கண்டெடுத்த குரங்கினம் அவற்றை அணிந்ததைப் போல் இருந்தது என விளக்குகிறார். மானிடர் அணிகலன்களைதக் குரங்கினம் முறையறியாது அணிந்தமை போல அரசர் குல அணிகலன்களைக் குடிகளாகிய யாமும் வகையறியாது அணிந்தோம் என்ற பிறிதொரு பொருளையும் இவ்வுவமை தந்து நிற்கிறது. இதிகாச உவமையால் கவிதைப் பொருள் படிக்கும் வாசகன் மனத்தில் எளிதில் பதியும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. மேலும் இப்பாடலில் இவ்வுவமை இளஞ்சேட் சென்னி பற்றிய நுட்பமான பல விளக்கங்களை அளிக்கவல்ல ஆற்றலோடு திகழ்கின்றது.

வட திசையிலே இமயமும் தென்திசையிலே ஆய்குடியும் இல்லையாயின் இம்மலர்தலை உலகம் கெடுவது உறுதி என இமயமலைக்கு நிகராக ஆய்குடினைச் சிறப்பிக்கின்றார் (132) முடமோசியார். புலவரின் உவமை ஆய்அண்டிரன் குறுநில மன்னன் என்ற நடப்புச் சிந்தனையை மாற்றி அவன் கொடையால் இமயமலைக்கு நிகரான மாமன்னன் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. இவ்வகையில் இவ்வுவமை சிறியதை ஆனால் நல்லதை மலையாய் உயர்த்திக் காட்டும் ஆற்றல் மிக்கதாய்த் திகழ்கிறது. இப்பாடலில் தொடக்கத்தில் எவரினும் முன்னதாக நினைக்க வேண்டிய நின்னைப் பின்னர் நினைத்தோனே என வருந்துகின்றார் முடமோசியார். பிழை செய்தேன் பிழை செய்தேன் என்று கூறிப் பின்னர் செய்தியைக் கூறும் நாட்டு வழக்கைப் போல இப்பாடற் பொருளும் அமைந்து சிறந்துள்ளது. - (தொடரும்)

*(முன் இதழ்த் தொடர்ச்சி)*

# மக்கள் நல அரசு

- நாபா.

## *தேர்ந்தெடுக்கப்படுவோர்*

*வாக்காளராகிய மக்கள் கட்சி அரசியலமைப்பில் எப்படிப்பட்டவர்களைத் தெரிந்தெடுத்தல் வேண்டும் என்பது ஒரு முக்கியமான கேள்வி. கட்சிகளைத் தேர்ந்தெடுப்பதா? அன்றிக் கட்சி வேறுபாடு பாராமல் கட்சிகளால் தேர்தல்களத்தில் நிறுத்தப்படும் வேட்பாளர் தகுதி அல்லது தகுதி இன்மை நோக்கித் தேர்ந்தெடுப்பதா? திருக்குறளில் கட்சிபற்றிய பேச்சுக்கு இடமில்லை. தனிமனிதரைப்பற்றித்தான் பேச்சு. அக்கட்சியில் உள்ள உறுப்பினரே காரணமாவார். எனவே தனிப்பட்ட மனிதன் திருந்தினாலொழிய கட்சி திருந்தும் என்று கூறுவதற்கில்லை. இது தொடர்பான 'தெரிந்து தெளிதல்' என்னும் அதிகாரத்திற்கு முன்னுரை தரும் பரிமேலழகர், "அஃதாவது அமைச்சர் முதலாயினாரைப் பிறப்பு, குணம், அறிவு என்பனவற்றையும் செயலையும் காட்சி, கருத்து, ஆகமம் என்னும் அளவைகளான் ஆராய்ந்து தெளிதல். வலி முதன் மூன்றும் (வலியறிதல், காலமறிதல், இடமறிதல்) அறிந்து பகைமேற் செல்வானுக்குத் தானைவினையுற்றுச் செய்தற் பொருட்டும், அறை போகாமற் பொருட்டும் இது வேண்டுதலின் அவற்றின் பின் வைக்கப்பட்டது" என்று விளக்கியுள்ளார். இவரது விளக்கம் போரை மையமாக வைத்து அமைந்துள்ளது. இது குன்றக்கூறல் என்னும் குறையாக அமைவதாகும். இவ்வதிகாரம் பொதுவாக அனைத்துப் பிரிவினருக்கும் பொருந்துமாறு அமைந்துள்ள ஒன்றாகும்.*

*மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவன் அல்லது ஒருத்தி உயர்ந்தகுடியில் பிறந்து, குற்றங்களினின்று நீங்கி, நமக்கு வடுவேற்படுமோ என்று இயல்பாகவே அஞ்சும் நாணம் உடையவராக இருத்தல் வேண்டும். இங்கு உயர்குடி என்றது*

சாதியன்று; குடும்பப்பாரம்பரியம் அல்லது கொடி வழி (Family Tradition). வடு என்பது நீங்காப்பழி; நாணம் என்பது அப்பழிபாவங்களுக்கு அஞ்சி அவை செய்யாது ஒழிதல். இவ்வியல்புகள் வேட்பாளரிடம் (condidate) உள்ளனவா என்று வாக்காளர் (voters) எண்ணித்துணிதல் வேண்டும். 'நாண்' அல்லது 'நாணம்' என்பதற்குப் பரிமேலழகர், 'இத்தொழில்களில் மனம் செல்லாமை' என்று விளக்கம் தருவர். நன்கு சிந்தித்துப்பார்த்தால் இவை எத்துணைப் பொருத்தமுடையன என்பது விளங்கும். இதனை,

*"குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்*
*நாணுடையான் கட்டே தெளிவு"*

என்னும் குறட்பா நன்கு வலியுறுத்துவது காண்க.

ஓர் அய்யம் ஏற்படலாம். உலகில் நல்லியல்புகளே உடையோர் உளரோ? தீமையும் நன்மையும் சேர்ந்தது தானே இவ்வுலகம். அங்ஙனமிருப்ப முற்றிலும் குற்றமற்ற சான்றோர்களைக் காண்டால் அரிதாகுமே! இவ்வாறு வாக்காளராகிய பொதுமக்கள் எண்ணக்கூடும். உண்மைதான், குணமே உடையாரும் குற்றமே உடையாரும் உலகில் இலர். இரண்டும் கலந்துதான் இருக்கும். அந்நிலையில் திருவள்ளுவர் ஓர் உபாயம் கூறுகிறார். சமுதாயத்தில்வாழும் ஒருவனைப்பற்றி அப்பகுதியில் வாழ்வோர் நன்கறிய வாய்ப்புண்டு. ஆகவே குணங்கள், குற்றங்கள் இரண்டையும் சீர்தூக்கி ஆராய்ந்து குற்றங்களைவிட குணங்கள் விஞ்சி நிற்குமேல், அவைநோக்கி அவனைத் தேர்வு செய்க என்கிறார் திருவள்ளுவர். இதனை,

*"குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்*
*மிகைநாடி மிக்க கொளல்"*

என்னும் குறட்பா நன்கு தெளிவுறுத்தல் காணலாம்.

இனி மற்றொரு முக்கியமான செய்தியை வாக்காளர்களுக்குக் கூறியுள்ளார் திருவள்ளுவர். அஃதாவது, மனைவி, மக்கள், சுற்றம் என்று ஒன்றுமில்லாதவர்களைத் தேர்ந்தெடுத்தல் கூடாது; ஏனெனின், அத்தகையோர்

இவ்வுலகில் யார் மீதும் பற்று வைக்கமாட்டார்; அது காரணமாகவே பழிக்கும் நாணார். இது பொதுவிதி. இதற்குப் புறநடையும் உண்டு என்பதை மறத்தல் கூடாது. உலகில் சிலர் திருமணமே செய்து கொள்ளாமல் தமது இளமை இன்பங்களையும் துறந்து நாட்டுப்பற்றுக் காரணமாகத் தமது வாழ்நாளெல்லாம் தொண்டாற்றிச் சிறந்த பதவிகளை வகித்துப் புகழுடன் வாழ்துள்ளனர் என்பதையும் மறத்தல் ஆகாது. ஆனால் இது புறநடையே; விதியாகாது. ஆகவே திருவள்ளுவர் கூறும் இவ்வுண்மையையும் மக்கள் மனங்கொண்டு தேர்தல் காலத்தில் வேட்பாளர்களைத் தெரிவு செய்தல் நன்று. இதனை,

*"அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர்*
*பற்றிலர் நாணார் பழி"*

என்னும் குறட்பா நன்கு தெளிவுறுத்தும். திருவள்ளுவர் இங்கு "அற்றார்" என்று வறிதே கூறியுள்ளார். எது அற்றார் என்பது ஊகத்திற்கு உரியதாகிறது. எனவே உரையாசிரியன் மார் மாறுபட்ட கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளனர். பரிமேலழகர் 'அற்றார்' என்பதற்கு 'சுற்றமில்லாதார்' என்பர். மணக்குடவர் 'ஒழுக்கமற்றார்' என்று பொருள் கூறுவர். பரிதிரியார், 'பொருளும் கிளையும் கல்வியும் அற்றாரை நம்பாதே; ஏன் என்றால் அவர் பற்றும்இலர்; பழிக்கும் நாணார் என்றவாறு' என்று விளக்கியுள்ளார். இங்குப் பரிமேலழகர் உரையே பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. 'சுற்றம்' என்பது மனைவி, மக்களையும் குறிக்கும் என்று கொள்ளல் தகும்.

தேர்தல் காலத்தில் பல்வேறு கட்சிகளும் தத்தம் வேட்பாளர்களைக் களத்தில் நிறுத்தும்போது சாதி, சமயம், உறவு, முதலிய அடிப்படைகளிலேயே அவர்களைத் தெரிவு செய்து நிறுத்துகிறார்கள் (selection of condidates). தொண்டு, பணியாற்றும் மனப்பண்பு, கட்சிப்பற்று, சமுதாயப்பற்று இவற்றை அடிப்படையாகக் கொண்டு அரசியல்கட்சிகள் வேட்பாளர் பட்டியலைத் தயார் செய்கின்றன. இதன் காரணமாக ஒரு தொகுதியில் எந்த மதத்தினர் அல்லது சாதியினர் பெரும்பான்மையினராக உள்ளனரோ அத்

தொகுதியில் அச்சாதி, மதத்தைச் சார்ந்தவரையே வேட்பாளராக்குகின்றனர். இதனால் பலவேளைகளில் நேர்மையான-திறமையான-சேவைசெய்யக்கூடியவர்களை விடுத்துத்தவறான வேட்பாளர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். இது, நன்கு சிந்தித்தால், நாட்டு நலனுக்கு நன்மை பயப்பது அன்று. இத்தகைய தேர்வு முறையால் இயல்பாகவே உள்ள பல்வேறு சாதிகளும் சமயங்களும் மேலும் வலிமைபெற்று மதத்தின் பெயராலும் சாதியின் பெயராலும் சிக்கல்களையும் சமுதாயக் கேடுகளையும் விளைவிக்க ஏதுவாகின்றன. எனவே திருவள்ளுவர் இவ்வகையில் மக்கள் விழிப்புடன் செயல்பட வேண்டும் என்று கருதி,

> ***"காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்***
> ***பேதைமை எல்லாம் தரும்"***

என்று கூறியுள்ளார். இது மிகவும் கடுமையான எச்சரிக்கை ஆகும். அஃதாவது, 'அன்புடைமை பற்றுக்கோடாகத்தமக்கு அறியவேண்டுவன அறியாதாரைத் தெளிதல், அரசனுக்கு எல்லா அறியாமையையும் கொடுக்கும் என்றவாறு' என்று பரிமேலழகர் இக்குறளுக்கு உரை கண்டுள்ளார். மேலும் விளக்குவாராய் அவர், 'தன்னோடு அவரிடை நின்ற அன்பு பற்றி அரசன் (மக்கள்) வினையை வைப்பின், அஃது அவர் அறிவின்மையால் கெடும்; கெட்டால், அவர்க்கு உளதேயன்றி வினைக்கு உரியாரை அறியாமை, மேல்விளைவறியாமை முதலாக அவனுக்கு அறியாமை பலவும் உளவாம் என்பதாம்" என்று கூறியுள்ளார். ஈண்டு 'அன்பு' என்பது 'நட்பு' (Friendship) அல்லது வேண்டியவர் என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. இதனை மேலும் விரித்துச் சாதியின்மேல் பற்று, மதத்தின்மேல் பற்று, இனத்தின்மேல் பற்று என்று விரிவான பொருள் கொள்ளலாம். திறமை, அறிவு, நிருவாகத்திறன் முதலியவற்றின் அடிப்படையில் தேறாது, வேறு வகையில் தேறின, நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் பலகேடுகள் சூழும் என்பது திருவள்ளுவர் விடுக்கும் எச்சரிக்கையாம்.

தகுதியானவர்களையே மக்கள் தேர்ந்தெடுத்தல் வேண்டும் என்று திருவள்ளுவர் கடுமையாக எச்சரிப்பதற்குக் காரணம் உண்டு. தவறானவர்களைத் தெளிவுசெய்வதன் மூலம் மக்கள் தீராத துன்பத்தைத் தேடிக்கொண்டவர்கள் ஆவார்கள் என்கிறார் திருவள்ளுவர். 'வழிமுறை தீரா இடும்பை தரும்' (குறள் 508) என்பது குறளடி

## அமைச்சராதற்குரியோர்

'தெரிந்து வினையாடல்' என்பது மிகச் சிறந்த அதிகாரம், இப்பகுதியில் வரும் செய்திகளும் கருத்துக்களும் அமைச்சரவை அமைப்போர்க்குப் பெரிதும் உதவும், இவ்வதிகாரத்தை விளக்குமுகத்தான் பரிமேலழகர், 'அஃதாவது அத்தெளியப்பட்டாரை அவர் செய்யவல்ல வினைகளை அறிந்து அவற்றின் கண்ணே ஆளுந்திறம்" என்று கூறுவார். பரிப்பெருமாள் என்னும் மற்றொரு பழைய உரைகாரர், "தெரிந்து வினையாடலாவது, வினை செய்வாரும் அவரால் செய்யப்படும் வினையும் பலவாதலின், அவ்வவ்வரால் செய்யப்படும் வினைகளை அறிந்து அவரையிட்டுச் செய்வித்தல். மேல்வினை செய்வாரை ஆராய்ந்து கூட்ட வேண்டும் என்றார்; அவரால் செய்யப்படும் வினையும் ஆராய்ந்து செய்யவேண்டும்" என்று விரித்து விளக்கியுள்ளமை அறியற்பாலது.

தெரிந்து வினையாடல் அதிகாரம் ஓர் அரசன் எத்தகையோரை அமைச்சராக்கவேண்டும் என்று கூறுவதாயினும், இன்றைய நிலையில் ஒரு தலைமை அமைச்சர் பிற அமைச்சர்களை எவ்வடிப்படையில் தெரிந்தெடுப்பது (Basis of selection) என்பதற்கும் இடந்தரவல்லதாகும். இன்று பெரும்பாலும் உலகின் பல்வேறு நாடுகளிலும் நாட்டின் தலைவரோ, தலைமை அமைச்சரோ ஓர் அமைச்சரவை (Ministry) அமைக்கும்போது, தகுதியின்றியும் கண்ணோட்டம், நட்பு முதலியவற்றின் காரணமாகப் பொருத்தமின்றித் துறைகள் (Portfolios) வேண்டியவர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. இந்தத்துறைக்கு இவர் பொருத்தமுடையவரா? திறமை உண்டா? என்பனவற்றை ஆராயாமல் விருப்பு வெறுப்புக்களுக்கேற்ப

(Whims & Fancies) அமைச்சர்களுக்குத்துறைகள் ஒதுக்கப் படுகின்றன என்பது யாவரும் அறிந்ததே.

திருவள்ளுவர் மிகத் தெளிவாகச் சில நெறிமுறைகளை வகுத்துள்ளார். அமைச்சராகும் ஒருவன் மக்களிடம் நாட்டினிடமும் அன்பும் பற்றும் கொண்டுள்ளவனா? என்பது முதற்கண் தெளியப்படல் வேண்டும். அதன்பின் நாடாளுதற்குரிய நூற்கல்வியும் நுட்பமதியும் உடையவனா என்பது தேறப்படல் வேண்டும். அன்றியும் அவன் தெளிவான சிந்தனை வளம் உடையவனா? அன்றி எதனையும் குழப்பும் இயல்பினனா? என்பனவும் அறியப்படல் வேண்டும். இவற்றிற்கு மேலாகப் பேராசை இல்லாமல் இருக்கிறானா என்பது தெரிந்துகொள்ளவேண்டும். இக்கருத்தமைந்த,

*"அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்*
*நன்குடையான் கட்டே தெளிவு"*

என்னும் குறட்பா நினைவு கூரத்தகும். இக்குறட்பாவுக்குக் காளிங்கர் தரும் விரிவான விளக்கம் வருமாறு:

"நாட்டார் சுற்றத்தார் ஆயினும் ஆக; அன்றிப் பிறரே ஆயினும் ஆக; யாவன் ஒருவன் தன்மாட்டு (நாட்டின் மீது) அன்பும் காரியாகாரியங்கள் தேறித் தெளியவல்ல அறிவும், தமது உயிரும் பொருளும் அவனுழைப்பெரிதும் தேரலாவதோர் தோற்றமும், மற்றும் நெறியல்லனவற்றின்கண்ணே அவாவின்மையும் என்று இங்ஙனம் சொல்லப்பட்ட நான்கும் குறைவின்றிப் பெரிதும் உடையான் (யாவன்) மற்று அவன் கண்ணதே ஆக, தெளிந்து வினை செய்யும் திறம்"

பொதுவாழ்வில் ஈடுபட்டுப் பதவிப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர் போன்றோர் மேற்கூறிய நெறிமுறைகளுக்கேற்ப நடப்பவராக இருத்தல் வேண்டும்.

மேலும், நட்புக் காரணமாகவும் அன்பு காரணமாகவும் ஒருவனை அமைச்சனாக்குதல் கூடாது. அதனால் காரியம் கெட்டுவிடும். அறிவு, சதுரப்பாடு முதலிய திறமைக் கூறுகள் உள்ளனவா என்று அறிந்து பதவி அளித்தல் வேண்டும்.

இதனைத் திருவள்ளுவர்,

*"அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்*
*சிறந்தானென் றேவற்பாற் றன்று"*

என்று கூறியுள்ளார். இக்குறட்பாவுக்குக் காளிங்கர் தரும் உரைவிளக்கம் மனங்கொள்ளத்தகும். அதுவருமாறு: "மற்று இங்குச் சொன்னமுறையே, 'யாம் இவற்கு இது முடிக்குவம்' என்று அறிந்து, மற்று அவ்வினை முடியும் அளவும் ஒழுக நடத்தி, அங்ஙனம் செய்யவல்லோர்க்கு அல்லது வறிதே, 'இவன் நமக்குப் பெரிதும் நட்பிற்சிறந்தான்' என்று ஒரு வினையை, 'நீ இது செய்வாயாக'கென்று ஏவுதற்குத் தகாது; அதனால், 'இவ்வினைக்கு இவன் தூயன்' என்று ஏவும் இத்துணை அல்லது சுற்றமும் தொடர்பும் பிறவும் நோக்கி வினைக்கு ஏவுதல் என்றும் தகாது என்றவாறு". மேற்கூறிய கருத்துக்களுக்கு அரண்செய்யும் வகையில் திருவள்ளுவர் மேலும் கூறுவாராய்,

*'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து*
*அதனை அவன்கண் விடல்'*

என வற்புறுத்தியுள்ளார். 'இந்தத்துறைக்கு இவன் ஆற்றலுடையான்' என்று தெரிந்து தெளிந்து அத்துறையை அவனிடம் ஒப்படைத்தபின் தலைமை அமைச்சர் என்பவர் அடிக்கடி அத்துறையில் தலையிட்டு அத்துறை அமைச்சரின் செயல்பாட்டினைக் கண்காணித்து வருதல் பயனளிக்காது. முழுப்பொறுப்பும் அவன்பால் இருத்தல் வேண்டும். செயல் உரிமை முழுமையாக அளிக்கப்படல் வேண்டும். அப்போதுதான் அவன் திறமை நன்கு வெளிப்படும்.

## மக்கள் நல அரசு

மக்களுக்கு எல்லாத்துறைகளிலும் நலம் விளைவிக்கும் அரசு மக்கள் நல அரசு (Welfare State) எனப்படும். இத்தகைய அரசு முடியாட்சியிலும் அமையலாம்; குடியாட்டியிலும் அமையலாம். மக்களின் நம்பிக்கைக்கும் அன்புக்கும் உரியவராக மன்னர் நடந்துகொள்வாராயின், அவரது ஆட்சியிலும் மக்கள் நல அரசு அமையும். இனி, மக்களாட்சி அமைப்பில் மக்களால்

தேர்ந்தெடுக்கப்பட்டு அரசு அமைப்போர் மக்கள் நலம் பேணத் தவறி, கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று மனம் போன போக்கில் அதிகாரத்தைத் தவறாகப்பயன்படுத்தித் தமது வளத்தை மட்டும் வளர்த்துக்கொள்ள முற்படின், அவர்களின் ஆட்சியில் மக்கள் நல அரசு அமைந்துவிட்டதாகக் கருத முடியாது. ஆயின் முடியாட்சி அமைப்பினும் குடியாட்சி அமைப்பே மக்கள் நல அரசு அமைவதற்கு ஏற்றதொன்றாகும்.

இந்தியா ஒரு குடியரசு. மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் சார்பாளர்களே நாட்டை ஆளுகின்றனர். இவர்கள் தம் கடமையை உணர்ந்து சேவை மனப்பான்மையுடன் மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்குரிய பல திட்டங்களைத் தீட்டி நடைமுறைப் படுத்துவராயின் மக்கள் நல அரசு மலர வழியுண்டாகும். இந்த முறையில் நமது இந்திய அரசியலமைப்பில் நமது அரசு மக்கள் நலம் பேணும் வகையில் எத்தகைய செயல்களையும் திட்டங்களையும் மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான வழி நடத்தும் கட்டளைகளை (Directive prinicples of State Policies) வகுத்து வழங்கியுள்ளன. அவற்றுள் பல முக்கியமான கொள்கைகளைத் திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே சிந்தித்து வெளிப்படுத்தியுள்ளார் என்பது நோக்கத்தக்கதாகும்.

ஓர் அரசு மக்கட்குப் பின்வரும் இன்றியாமைத் தேவைகளை நிறைவற்றித்தரல்வேண்டும்.

1) உணவு
2) உடை
3) உறையுள்
4) உடல்நலம்
5) கல்வி

மேற்கண்ட ஐந்தினையும் ஆற்றவல்லதே ஒரு மக்கள் நல அரசாகும். மக்களுக்கு உணவு இன்றியமையாத அடிப்படைத் தேவை என்பதற்கு விளக்கம் வேண்டா. உயிர்வாழ்வதற்கே உணவு தேவை, உயிரும் உடம்பும் ஒன்றுபட்டு இயங்க இது தேவையானது. உடம்பு என்பது உணவின் பிண்டம் ஆகும். 'உண்டிமுதற்றே உணவின் பிண்டம்' என்பது புறநானூற்று அடி

உணவின் நேர் பசித்துன்பம் வாழ்க்கையைச் சிதைத்து விடும். 'உள் நின்று உடற்றும்பசி' என்பர் திருவள்ளுவர். உடம்பிற்குள் ஒரு போராட்டமே நடைபெறும் என்பது இதன்பொருள். பசித்துன்பத்தைப் பற்றித் திருவள்ளுவர் ஆழமாகச் சிந்தித்துள்ளார். ஒரு நெருப்பில் கூடத்தூங்கிவிடலாம்; ஆனால் வறுமை (பசி) என்னும் நெருப்பில் அவன் ஒருகாலும் உறங்க முடியாது. மணிமேகலைக் காப்பியம் அருளிய தண்டமிழ் ஆசான் சாத்தனார் இப்பசியின் கொடுமையைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்:

*"குடிப்பிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்*
*பிடித்த கல்விப் பெரும்புணை வீடூஉம்*
*நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்*
*பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்*
*பசிப்பிணி என்னும் பாவியது தீர்த்தோர்*
*இசைச்சொல் அளவைக்கு என்நா நிமிராது".*

என்பது மணிமேகலை அடிகள். (பாத்திரம் பெற்ற காதை: 76-81). பசி ஏற்படுமானால் - அது தீர்க்கப்படாவிட்டால் - மனிதனின் ஒழுக்கத்தைச் சிதைக்கும்; பெருமையைக் குலைக்கும்; கல்வியறிவு மங்கும்; நாணம் பறந்துவிடும்; அழகு ஒழியும். அன்றியும் பசித்துன்பம் ஒருவனைத் தன் மனைவியுடன் பிறர் வீட்டுவாசலில் சென்று நிற்கச் செய்யும். இத்துணை இழிவுகளையும் பசி விளைவிக்கும் என்கிறார் சீத்தலைச் சாத்தனார். திருவள்ளுவரும்,

*'அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்*
*பெற்றான் பொருள் வைப்புழி'*

என்று பசியின் கொடுமையையும் அதனைத் தீர்க்கும் செல்வர் பாதுகாப்பாகத் தம் பொருளைவைத்துக் கொள்ளும் உபாயத்தையும் விரித்துக் கூறுகிறார் இக்குறளில். அன்றியும், ஆட்சியாளர் தமது முதற்கடமையாகப் பசி, பிணி, பகை என்ற மூன்றும் மக்களைத் தாக்காமல் காத்தல் வேண்டும். இக்கருத்தமைந்த,

*"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்*
*சேராது இயல்வது நாடு"*

என்னும் திருக்குறட்பா சிந்திக்கத்தகும். "மிக்கபசியும், நீங்காத நோயும், புறத்து நின்று வந்து அழிவு செய்யும் பகையும் இன்றி இனிது நடப்பதே நாடாவது" என்று பரிமேலழகர் இதற்கு விளக்கம் தருவர். மேலும் அவர், 'உறுபசி உழவருடைமையானும் ஆற்ற விளைதலானும் சேராதாயிற்று; ஓவாப்பிணி, தீக்காற்று, மிக்ககுளிர் வெப்பங்களும் நுகரப்படுமவற்றது தீமையும் இன்மையின் சேரதாயிற்று; செறுபகை அரசன் (ஆள்வோன்) ஆற்றலும் நிலைப்படையும் அடவியும் அரணும் உடைமையின் சேராதாயிற்று." என்று விரிவுரையும் தந்துள்ளார். இவை சிந்திக்கத்தக்கவை.

நாட்டில் பசிக்கொடுமை அறவே ஒழிக்கப்பட வேண்டுமாயின், உழவுத்தொழில் சிறக்கவேண்டும். வேளாளர் விளை பொருள்களை மிகையாக விளைவித்தலில் முனைப்புக் காட்டுதல் வேண்டும். பயிர்த்தொழில் வளம்பெற நீர்ப்பாசனம் இன்றியமையாதது. மழையை நம்பிமட்டும் உழவர் இருப்பரேல் கருதிய பயன் கிடைத்தல் ஐயமே. இயற்கை நமது கட்டுப்பாட்டில் இல்லை. மேலும் மழை பெய்தும் கெடுக்கும் பெய்யாமலும் கெடுக்கும். எனவே மழைக்காலத் தண்ணீரைத் தேக்குவதற்கு ஆங்காங்கு அணைகள் கட்டப்படல் வேண்டும்.

அணைகளில் நீர்வரவைத் தேக்கி வைத்து வேண்டும்போது திறந்து விட்டு அதனை உழவர் பயன்படுத்தல் கூடும். இனி இவ்வாறு ஆற்று நீரின்றியும் ஊற்று நீரும் தேவைப்படும். அணைகள் இல்லாத பகுதிகளில் உழவு செழிக்கவும் பருவத்தே பயிர் செய்யவும் ஊற்று நீரையும் பயன்படுத்தவேண்டும். இதற்குறிய கேணிகள், கிணறுகள் வெட்டப்படுதல் வேண்டும். இவற்றை எல்லாம் அரசுதான் செய்ய இயலும். இது மக்கள் நலம் பேணும் நாகரிக அரசின் தலையாய கடமையாகும். உழுதல் தொழிலின் சிறப்பினைத் திருவள்ளுவர் ஓர் அதிகாரம் முழுமையும் விரித்துக் கூறியுள்ளார். உலகமே உழவரால்தான் சுழல்கிறது என்கிறார் அவர்.

**"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை"**

என்பது அவரது வாய்மொழி, அன்றியும்,

*"உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது*
*எழுவாரை எல்லாம் பொறுத்து"*

என்பதும்,

*"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்*
*தொழுதுண்டு பின்செல் பவர்"*

என்பதும் மனம் கொண்டு சிந்திக்கற்பாலன. இவற்றை நோக்குங்கால் ஒரு நாட்டில் பயிர்த்தொழில் சிறத்தல் வேண்டும் என்பதும், அதற்கு வேண்டும் வசதிகளை உழவர்க்குச் செய்துதருதல் அரசின் கடமை என்பதையும் வலியுறுத்துகிறார் திருவள்ளுவர். இதன் காரணமாக நாட்டில் விளைபொருள் மிகுந்து மக்களுக்குப் பசித்துன்பம் ஏற்படாதவாறு பாதுகாத்தல் இயலும். இனி உடல் வளர்ச்சிக்கு உணவு வேண்டும் என்று கூறிய திருவள்ளுவர் மனிதன் நாகரிகத்துடன் வாழவேண்டும் என்பதற்காக உடையும் இன்றியமையாதது என்கிறார். இதனை நேர்முகமாக வற்புறுத்தவில்லை எனினும், உடையின் இன்றியமையாமையைப் பிறவாறு வற்புறுத்தியுள்ளார் திருவள்ளுவர். உடையவன் ஒருவன் இல்லாத மற்றொருவனுக்கு அவன் வேண்டும் பொருள் கொடுக்குங்கால் அது காரணமாக அழுக்காறு (பொறாமை) கொண்டு வாழும் அறிவிலான் தான் உண்ணும் உணவும் உடுக்கும் உடையும் இல்லாமல் துன்புறுவான் என்பதுடன் அவனது சுற்றமும் அவ்வாறே துன்புறும் என்று கூறுகிறார் திருவள்ளுவர்.

***"கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்***
***உண்பதூஉம் இன்றிக் கெடும்"***

என்பது குறட்பா. பிறிதோரிடத்தில்,

***"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே***
***இடுக்கண் களைவதாம் நட்பு"***

என்றும் கூறுவர். இங்கு உடுக்கை என்பது உடுக்கப்படும் உடை அல்லது ஆடை இக்கூறியவற்றால் மனிதனுக்கு மானம் மறைக்கும் ஆடை எத்துணை இன்றியமையாதது என்பது விளங்கும்.

- (தொடரும்)

# உன்னத உடல் நலம் உயர்வான வாழ்வு தரும்

## உடல் நலப் பரிசோதனை திட்டங்கள்

- எக்ஸிகியூட்டிவ் முழு உடல் நலப் பரிசோதனை
- முழு உடல் நலப் பரிசோதனை
- முதியவர்களுக்கான முழு உடல் நலப் பரிசோதனை
- குழந்தைகளுக்கான முழு உடல் நலப் பரிசோதனை
- திருமணத்திற்கு முன் பரிசோதனை
- முழு இருதய பரிசோதனை
- முழு நீரிழிவுப் பரிசோதனை
- புற்று நோய்ப் பரிசோதனை
- மதுப் பழக்கமுள்ள நோயாளிகளுக்கான முழு சோதனை
- ஆண்களுக்கான பாலியல் குறைபாடுகள் குறித்த சோதனை
- வெளிநாடு செல்லும் பயணிகளுக்கான பரிசோதனை
- பொது உடல் நலப் பரிசோதனை
- வேலைக்குத் தகுதி பெற மருத்துவப் பரிசோதனை

காலை 8.00 மணி முதல் 9.00 மணிக்குள்
நீங்கள் விரும்பிய நாளில் (ஞாயிறு உள்பட)
வெறும் வயிற்றில் மல சாம்பிளோடு நேரில் வரவும்.

உங்கள் நோய் பற்றிய பிரச்சனைகளுக்கு தொலைபேசியின் மூலம் இலவச ஆலோசனை வழங்கப்படும். திங்கள் முதல் வெள்ளி வரை நேரம்: மாலை 4.30 மணி முதல் 5.30 மணி வரை.

மாஸ்டர் ஹெல்த் செக்-அப் டிபார்ட்மெண்ட்

**மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம்**

லேக் ஏரியா மேலூர் ரோடு. மதுரை-625 107. போன்: 536361-68
Fax: 536353 E-mail: mmhrc @ md2.vsnl.net.in



அன்பு அச்சகம், மதுரை-1 ✆ 741116